Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-18 | 02-01-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -319


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11120)

# மட்டு-அம்பாறை மீள்குடியேற்றம்;

# விடுதலைப்புலிகள் திட்டம் தயாரிப்பு

## மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு

**மட்டு-அம்பாறை மாவட்ட மக்களை இந்த "சுனாமி அனர்த்தத்தின் பின் மீளக் குடியமர்த்தும் இடங்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வகுத்து வருகின்றார். புவியியல் ரீதியாக நோக்கினால் இந்த அனர்த்தத்தின் பின் வேறு இடங்களில் மக்களை குடியமர்த்த வேண்டியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் தலா ஆயிரம் குடும்பங்கள் என்ற வகையில் பாதுகாப்பான இடங்களில் பத்தாயிரம் மக்களை-அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தும் திட்டமும் உண்டு" இவ்வாறு மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.**

நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் அம்பாறை மாவட்டம் சின்னமுகத்துவாரம் (அக்கரைப்பற்று) என்னுமிடத்தில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது, மட்டு. அம்பாறை மாவட்டத்தின் சுனாமி அனர்த்தம் மற்றும் கடந்த இரண்டொரு நாட்களாகப் பெய்துவரும் மழை என்பனவற்றால் பல இடங்களில் பல பாலங்கள் உடைந்து பாதைகள் உருக்குலைந்துபோயுள்ளன. போக்குவரத்து சீரற்று இருப்பதனால் சில கிராமங்கள் தனித் தனித்தீவுகளாக ஆக்கப்பட்டுள்ளன. அந்தத் தீவுகளுக்குரிய உணவு, தண்ணீர், மருந்துகள் என்பனவற்றை தொண்டர் நிறுவனங்கள், போராளிகள் காவிச் சென்று கொடுக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் கடல் அனர்த்தம் ஏற்பட்ட அன்றைய நாளிலிருந்து இன்றுவரை மட்டு. அம்பாறை மாவட்ட அனைத்துப் பொறுப்பாளர்களும், போராளிகளும் வாகரையிலிருந்து பொத்துவில் வரை தொடர்ந்து பாதிக்கப்பட்ட கிராமங்களில் நேரடியாக நின்று உதவிப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மக்களின் துயரங்களைப் போக்கும் பணிகளில் அவர்கள் இரவு, பகலாக நின்று உழைக்கின்றார்கள்.

தற்போது பாதைகள் உடனடி (14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை.இறால் குளத்திலிருந்து 23 சடலங்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கடற்புவிநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லை நகரில் அமைந்துள்ள இறால் குளத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீட்புப்பணிப் போராளிகளால் 23 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீட்புப் பணிப் போராளிகளால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கையின் போது தினமும் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் இறால் குளத்தில் பெருமளவான சடலங்கள் காணப்பட்டதை அடுத்து நேற்றைய தினம் மீட்புப் பணிகள் இறால் குளத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது குளத்து நீரில் காணப்பட்ட 23 சடலங்கள் மோசமாக உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

### - கந்தளாய் நீர்த்தேக்கக் கதவுகள் திறந்து -

## மூதூருக்கு நிவாரணப்பொருட்கள் கொண்டு செல்வதை தடுக்க சதி

இதுவரை எந்த நிவாரண உதவியுமின்றி இருக்கும் மூதூர்ப் பிரதேசம் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேச மக்களிற்கென எடுத்துச் செல்லப்பட்ட நிவாரணப் பொருட்கள் சதிமுயற்சியொன்றின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மூதூர் பிரதேசத்திற்குச் செல்வதற்கான ஒரேயொரு பாதையாக உள்ள அல்லை-கந்தளாய் வீதி வழியாக உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு கடந்த சில தினங்களாக ஜே.வி.பி.யும் இதர சிங்கள இனவாதிகளும் தடை விதித்து வந்தனர். இதனால் அந்தப் பிரதேசத்திற்கு பாரஊர்திகள் ஏதும் செல்ல முடியாமலிருந்தது. இருந்தும் நேற்று அப்பகுதிகளிற்குச் செல்வதற்காக நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற பாரவூர்திகளை மறிப்பதற்காக எந்தவித முன்னறிவிப்புமின்றி கந்தளாய் நீர்த்தேக்கக் கதவுகளை நீர்வடிகால் சபையினர் திறந்து விட்டனர். இதனால் மேற்படி வீதி வெள்ளத்தில் மூழ்கிய தால் மேற்படி பாரஊர்திகள் தற்போது கந்தளாய் பிரதேச அலுவலகத்தில் தரித்து நிற்கின்றன. இப்படியாக எந்தவித முன்னறிவிப்புமின்றி கந்தளாய் நீர்த் தேக்கக் கதவுகளை திறக்க வேண்டிய தேவையேதுமற்ற ஒரு நிலையில், பெரும் (14ஆம் பக்கம் பார்க்க)

### - மட்டு அம்பாறை மாவட்டங்களில் -

## பாதிக்கப்பட்ட இடங்களை கேணல் பானு பார்வையிடுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் பானு தற்போது அம்பாறை மாவட்டத்தில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

இவருடன் அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன், மட்டக்களப்பு மாவட்டத் தளபதி ராம், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் இணைந்துள்ளனர். இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களுக்குச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

26.12.2004 அன்று முல்லைத்தீவு பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக தமிழீழ தேசியத் துணைப்படைவீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப்டினனட் வசந்தராணி (இராசன் வசந்தராணி
செல்வபுரம், முல்லைத்தீவு த.மு: இல21, வசந்தா குடியிருப்பு எட்டாம்வட்டாரம் புதுக்குடியிருப்பு, (முல்லை) என்பவரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## மட்டக்களப்பு கரையோரப்பகுதி 9 துண்டுகளாகப் பிரிவுபட்டது

கடல்பெருக்கினால் மிகமோசமான பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு பொத்துவில் தொடக்கம் பனிச்சங்கேணிவரையான பாதை துண்டாடப் பட்டுள்ளதால் ஒன்பது தனித்தனி தீவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

கடல்பெருக்கின் போது வேகமாக வந்த அலைகளினால் அரிக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு கோமாரிப்பாலம் உடைந்ததால் பொத்துவில், தனியாகவும் திருக்கோவில் தம்பிலுவில் பகுதி தனித்தீவு போன்றும் ஒலுவில், காலியோடை வரைக்குமான பகுதி தனித்தீவு போன்றும் இதிலிருந்து பெரிய நீலாவனை வரை தனிப்பகுதியாகவும் பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு என்பன பிரிக்கப்பட்டு மற்றுமொரு தனித்துண்டுகளாகவும், (14ஆம் பக்கம் பார்க்க)

### - குடத்தனை வடக்கு சுனாமியில் பாதிப்புற்றோர் -

## நலன்புரி நிலையம் மீது படையினர் தாக்கு மக்கள் சிதறி அடித்து ஓட்டம்!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையத்தினுள் புகுந்த படையினர் அங்கு மக்களைத் தாக்கி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இது பற்றித் தெரியவருவதாவது; குடத்தனை வடக்கிலுள்ள அமெரிக்க மிசன் பாடசாலையில் சுனாமி அலையின் தாக்கத்திற்கு பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ளனர்.

இந்த முகாமில் 90 குடும்பங்களைச் சேர்ந்த 500 குடும்ப உறுப்பினர்கள் தங்கியுள்ள நிலையில் நேற்று மாலை 7.30 மணியளவில் முகாமில் திடீரென்று ஆயுதங்களுடன் சிவில் உடையுடன் வந்த 150இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரில் 75 பேர் முகாமைச் சுற்றியும், 75பேர் முகாமிற்குள்ளேயும் சென்று சிறுவர்களுக்கு கட்டாயப்படுத்தி கடலை வழங்க முற்பட்டுள்ளதுடன் திடீரென மின் விநி (14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை நகரை கட்டியெழுப்பும் பணி எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது

### - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு பகுதியில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் சேதமடைந்த முல்லை நகர்ப்பகுதியை மீண்டும் பழைய நிலைக்கு கட்டி எழுப்பவேண்டும் அதை முன்னெடுக்கும் பணி எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது என்று நேற்று அவசரமாக நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

நேற்று காலை 10.00 மணியளவில் முல்லைத்தீவு நிகொட் திட்டப்பணிமனையில் ஒரு அவசர சந்திப்பொன்றை சூசை நடாத்தினார். இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம் அழிந்துபோயுள்ள முல்லை நகர்ப்பகுதியையும் அதனை அண்டிய ஏனைய அழிவடைந்த பகுதிகளையும் மீளக் கட்டியெழுப்புதலாகும்.



இதற்கு முதற்கட்டமாக இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தங்கள் இடத்தில் குடியமர்த்தவேண்டும் இந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க கடலோரப் படையினர் 1500 பேர் நிவாரண நடவடிக்கைகளில்

### - உலங்குவானூர்தி கப்பல் மூலம் அனுப்ப முடிவு

சுனாமி அலையினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பேரழிவுகளுக்கு உதவி புரியவென வெளிநாடுகளின் உதவி பெருமளவாக குவிந்து வரும்வேளையிலும் அமெரிக்கா தனது படைகளில் 1500 மரையன் விசேட பயிற்சி பெற்ற வீரர்களை பாரிய உலங்குவானூர்திக் கப்பல் மூலம் அனுப்ப முடிவு செய்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்று ஹோட்டல் கலதாரியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மேற்படி 1500 துருப்பினருடன் ஐந்து தரையிலும், கடலிலும் செல்லும் போவோ சிறாப் 5 அமெரிக்க மரையன் உலங்கு வானூர்திகளும் அடுத்தவார இறுதிக்குள் இலங்கை வரவிருப்பதாகவும் கூறினார். இவற்றில் நிவாரணப் பணிக்குரிய பொருட்கள் அனைத்தும் கொண்டுவரப்படவிருப்பதாகவும் (14ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**வகுப்புக்கள் ஆரம்பம்**

கேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி 2007. A/L கணித, விஞ்ஞான கலைவர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்:- 03.01.2005 (திங்கள் 8.00 A.M)(5448)

**கேக் செய்து கொடுக்கப்படும்**

பண்டிகைக்கால மற்றும் சம்பிரதாய பூர்வவிழாக்களுக்கான சகல வகையான கேக் வகைகளும் விருப்பத்திற்கேற்றபடி செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு சித்திரா,கானான், தருமபுரம்.(4948)

## இயற்கைப் பசிக்கு இரையாகிப்போன உறவுகளின்... ஆறாத்துயரில்...

2004.12.26 அன்று முல்லைத்தீவில் கடலலைத் தாக்குதலின்போது சாவைத் தழுவிக்கொண்ட முல்லைத்தீவு, மணற்குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அவர்களின் மனைவியான சீத்தா மற்றும் பிள்ளைகளான சுஜிதா, புவிதா மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த பிரபு-புனிதா தம்பதிகளின் அன்பு மகள் சஞ்சிகா ஆகியோருக்கும் இச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகிறேன்.

தகவல்:
மு.ராஜேஸ் (வாணன்)
(உடன்பிறவா சகோதரன்)

ஆயப்பகுதி,
புளியங்குளம். (5460)

## பணிக்கு வருக

கரைதுறை பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க அனைத்துப் பணியாளர்களும். முள்ளியவளை யில் இருக்கும் தலைமைக் காரியாலயத்திற்கு வருகைதந்து பணிகளை தற்காலிகமாக மேற்கொள்ளுமாறு கரைதுறைப் பற்று ப.நோ.கூ பொது முகாமையாளர் மனோகரன் கேட்டுக கொண்டார். மக்கள் சிலாவத்தை, அளம்பில், செம்மலை கிளைகளில் வழமை போல நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (20)

## வருகை தரவும்

முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்களம் கடல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது முள்ளியவளை கமநல அபிவிருத்தித்திணைக்களத்தில் இயங்குவதால் பணியாளர்கள் அனைவரையும் தற்போது இயங்கும் இடத்திற்கு வருகை தருமாறு முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தர்மலிங்கம் தெரிவித்தார். (20)


- மன்னார் பிரதேசத்தில் -

## கடல் கொந்தளிப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார் கச்சேரியில் நேற்று முன்தினம் மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் கடல் கொந்தளிப்பு சமயத்தில் மக்கள் எவ்வாறு விழிப்பாக இருக்கவேண்டும் என்பது தொடர்பான கூட்டம் இடம் பெற்றது. இதில் அடிக்கடி வரும் வதந்திகளை கவனத்தில் கொண்டு மக்கள் விழிப்பாக இருக்கவே இச்செயலமர்வு இடம் பெற்றது.

இதில் வானிலை அவதான நிலையத்துடன் தொடர்பு கொள்ள போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்தல், மக்களை ஒன்றுதிரட்டி ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமான ஒழுங்கமைப்பும் செய்யப்பட்டது.

இந்தக் கூட்டமானது மன்னார் அரசியல் துறையினரின் வேண்டுகோளிற்கு இணங்கவே ஒழுங்கு படுத்தப்பட்டது. இந்தக் கூட்டத் தில் மன்னார் அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் மன்னார் ஆயரின் பிரதிநிதிகள் இந்து கத்தோலிக்க முஸ்லிம் சமய பிரதிநிதிகள் வானியலை சம்பந்தமான அரசு திணைக்கழத்தின் பிரதிநிதிகள் உட்பட்டோர் கலந்துகொண்டனர் இந்தக் கூட்டத்தில் வெள்ள அனர்த்தத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற வதந்திகளை தடை செய்தல், களவுகளை கண்டுபிடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டது. ( 18)




# காணவில்லை

**சிவஜெயந்தன் அபிசேகன்**

எனும் 8 வயதுச் சிறுவன் (முல்லைத்தீவு கோயில் குடியிருப்பைச் சேர்ந்தவர்) வெள்ள அனர்த்தத்தின் பின் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 27.12.2004 அன்று மாலை பொது நலன்விரும்பி ஒருவரால் பராமரிப்பிற்காகவோ/பொது மகன் ஒருவரால் தவறுதலாகவோ கூட்டிச்செல்லப்பட்டது தெரிய வருகிறது. எனவே கூட்டிச்சென்றவர் குடும்பத்தை இழந்து தவிக்கும் அக்குழந்தையின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டும், குழந்தையின் தகப்பனின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டும் உடன் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். யாராவது தகவல் தெரிந்தால் உடன் எமக்கு தெரியத்தரவும்.


Dr.S.சிவமோகன் (0777-237143)
அபிஷா தனியார் வைத்தியசாலை
வவுனியா. (5523)

தகவல் தரவேண்டிய இடம்
அனைத்து காவல்துறை பணிமனைகள்.

Mr.S.சிவஜெயந்தன்
1 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
சி.சிவஜெயந்தன் தகப்பன்

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்





**துணைப்படை உறுப்பினர்**
**2ஆம் லெப் வசந்தராணி**
**(இராசன் வசந்தராணி)**

**(செல்வபுரம், முல்லைத்தீவு)**

**தம்பா**
**(இராசன் டிலக்சன்)**

விடுதலையின் கனம் அறிந்து
துணை அணியில் நீ இணைந்து-உன்
சேய் அவனின் துயர் போக்கி சேவைகள்
பல புரிந்த எம் இனியசோதரியே!

விடுமுறையைக் கழிக்கவென
அன்னையின் கரம் பற்றி
நுரைபொங்கும் அலைகடலில்
ஆடிக்கழிக்கவென
ஆனந்தமாய் சென்ற – எங்கள்
அன்புச் செல்வமே!

இவர்களுடன் 26-12-2004 அன்று ஆழிக் கடலின்
ஊழித்தாண்டவத்தில் உயிரிழந்த எம் இனிய உறவுகளிற்கும்
எம் கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

துணை அணியினர்,
நிதித்துறை.

தணிகை இல்லம்
"சிறுவர் நலன் பேணலகம்,"
கிளிநொச்சி.

(5522)

-சுனாமி அலையின் கொடூரம்-

# இந்தோனேசியாவில் தொடரும் பெருந் துயர்— பிணங்கள் அழுகி துர்நாற்றம்; அந்நாட்டு அரசு திண்டாட்டம்

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் சுனாமி அலையின் தாக்கத்திற்கு பலியானோர் தொகை ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளதால் பிணங்கள் அழுகி துர்நாற்றம் வீசுகின்றன. இதனால் அந்நாட்டு அரசு பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளதுடன் ஆறாத்துயரிலும் மூழ்கியுள்ளது.**

இந்தோனேசியாவில் உள்ள சுமாத்திரா தீவை மையமாகக் கொண்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை கடுமையான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் ஏனைய நாடுகளை விட இந்தோனேசியாவில் தான் பாதிப்பு அதிகம்.

அங்குள்ள பாண்டா ஆஷே மாகாணம் முக்கால் வாசி அழிந்து விட்டது. அங்கு மட்டும் இறந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டும் என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. இதுவரை 78 ஆயிரத்து 940 பேர் இறந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் ஏற்பட்ட பேரழிவுகளில் இதுதான் மிகப் பெரியது என்று கூறப்படுகிறது. 1883 ஆம் ஆண்டு எரிமலை வெடித்து சுனாமி தாக்கியபோது கூட 36 ஆயிரம் பேர்தான் பலியானார்கள்.

இப்போது சுனாமி அலை தாக்கியதில் பலியானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. பாண்டா ஆஷே மாகாணத்தில் இடிபாடுகளுக்குள் தோண்டத் தோண்ட பிணங்களாக வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமி அதிர்ச்சி ஏற்பட்டு நேற்றுடன் 6 நாட்கள் ஆகியும் பிணங்கள் முழுதுமாக அப்புறப்படுத்தப்படவில்லை. தெருக்களில் ஆங்காங்கே உடல்கள் அழுகி துர்நாற்றம் வீசிக் கொண்டு இருக்கின்றன.

உயிர் தப்பிய மக்களுக்கு நிவாரண உதவியும் சரிவர கிடைக்கவில்லை. பெற்றோலுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டு வாகனங்கள் வீதிகளை அடைத்துக் கொண்டு நிற்கின்றன. இதனால் நிவாரணப் பொருட்களை வீதி வழியாக கொண்டு செல்லமுடியவில்லை.

இதுபற்றி இந்தோனேசிய அதிபர் சுசிலோ பாம் பங்யு தோயுனோ கூறுகையில் "ஆயிரக் கணக்கான மக்கள் செத்து மடிந்து தெருக்களில் பிணங்களாக கிடப்பதை பார்த்து நாங்கள் கதறி அழுகிறோம். எங்கள் இதயம் அழுகிறது" என்றார்.

நிவாரணப் பொருட்கள் கிடைக்காததால் உயிர்தப்பிய மக்கள் கொந்தளித்து போய் இருக்கிறார்கள். இயந்திர துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் அங்கே ரோந்து சுற்றி வருகிறார்கள். அவர்கள் இல்லாவிடில் கலவரம் வெடித்து விடும். இந்தோனேசியா அரசு செய்வதறியாது கைபிசைந்து நிற்கின்றது.

## 42 தீவுகளைக் காணவில்லை

(மாலே)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட சுனாமி பேரழிவால் மாலைதீவுக்குச் சொந்தமான 42 தீவுகள் இருந்த இடம் தெரியாமல் அடியோடு அழிந்து விட்டதாக அந்நாட்டு அதிபர் அப்துல் கயூம் தெரிவித்துள்ளார். மொத்தமுள்ள 1192 தீவுகளில் 42 தீவுகள் முற்றிலும் அழிந்துவிட்டன.



இந்தோனேசியாவில் சுனாமி அலையினால் அடித்துச் செல்லப்பட்டு இறந்தவர் ஒருவரின் உடலை இந்தோனேசியப் பொலிசார் காவி வருகிறார்கள்.

## அந்தமான் தீவில் நேற்றும் நிலநடுக்கம் சுமாத்திரா தீவும் குலுங்கியது

572 சிறு,சிறு தீவுகளைக் கொண்ட அந்தமான் - நிக்கோபார் தீவுகளை கடந்த ஒரு வாரமாக நிலநடுக்கம் சுற்றி சுற்றி வந்து பாடாய் படுத்தியபடி உள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அங்கு 9 தடவை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பிறகு அந்தமான். தீவுகளில் நேற்றுக் காலை வரை தினந்தினம் நிலநடுக்கமும்,நில அதிர்வுகளும் மாறி மாறி தாக்கி வருகிறது.

நேற்று முன்தினம் இரவு 11.32 மணிக்கு நிக்கோபார் தீவு அருகே திடீர் நில நடுக்கம் ஏற்பட்டது. அது 5.2 ரிக்டேர் ஸ்கேல் அளவுக்கு பதிவாகி இருந்தது.

அதன் பிறகு நேற்று அதிகாலை 3.40 மணிக்கு அந்தமான் தீவு அருகே மற்றொரு நில நடுக்கம் உருவானது. அது 5.0 ரிக்டேர் ஸ்கேல் அளவுக்கு பதிவாகியது. இந்த 2 நிலநடுக்கங்களாலும் எந்த சேதமும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் அந்தமான்,நிக்கோபார் தீவுகளில் சுமார் 30 தடவை நில நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. அதைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட தடவை நில அதிர்வுகள் உண்டானது.

இத்தகைய தொடர் தாக்குதல்கள் அந்தமான் நிக்கோபார் தீவு மக்களை அதிர்ச்சிக்குள் நீடிக்க வைத்தள்ளது. அந்த தீவுகளில் உள்ள 5 ஆயிரம் பேரை காணவில்லை.

அந்தமான் தீவுகளை சுற்றி நிற்கும் சுமார் 40 கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப்படையின் 50 உலங்கு வானூர்திகள் மூலம் மீட்புப்பணிகளும், நிவாரணப் பணிகளும் நடந்து வருகின்றன. முப்படைகளைச் சேர்ந்த 2 ஆயிரம் வீரர்கள் காணாமல் போனவர்களைத் தேடி வருகிறார்கள்.

சுமாத்திரா தீவும் நேற்று காலை நில நடுக்கத்தால் குலுங்கியது. அந்த நில நடுக்கம் காலை 7.26 மணி அளவில் சுமாத்திரா தீவின் மேற்கு கடலோர பகுதியில் மையம் கொண்டிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இதே இடத்தில் தான் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு வாரத்துக்குள் மீண்டும் அதே இடத்தை நில நடுக்கம் குலுக்கியதால் சுமாத்திரா தீவு மக்கள் கடும் பீதி அடைந்தனர். இந்த நில நடுக்கம் 5.2 ரிக்கேடர் ஸ்கேல் அளவுக்குபதிவாகி இருந்தது.

## பூகம்பம் குடிகொண்டுள்ள தாய்வானில் உலகில் மிக உயரமான கட்டடம் திறப்பு

(தைபே)

சூறாவளியும், பூகம்பமும் அடிக்கடி தாக்கும் தாய்வான் நாட்டின் தலைநகரில் உலகிலேயே மிக உயரமான 101 அடுக்குமாடிக் கட்டடம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

தாய்வான் நாட்டில் பூகம்பமும், சூறாவளியும் அடிக்கடி தாக்குகிறது. கடந்த 1999 ஆம் ஆண்டு ரிக்டர் அளவுகோலில் 7.6 அளவுக்கு பூகம்பம் தாக்கியது, இந்தச் சம்பவத்தில் இரண்டு ஆயிரத்து 400 பேர் இறந்தனர். 50 ஆயிரம் கட்டடங்கள் இடிந்தன.

இந்நிலையில், உலகிலேயே மிக உயரமான கட்டடம் தைபேயில் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. 101 அடுக்குகள் கொண்ட இந்தக் கட்டடத்தை கட்டி முடிக்க ஆறு ஆண்டுகள் ஆனது. 508 மீற்றர் உயரம் கொண்ட இந்தக் கட்டடம், ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளிகள் வரை ஏற்படும் நிலநகடுக்கத்தால் பாதிக்கப்படாமல் இருக்கும் படி, தொழில்நுட்ப ரீதியாக திட்டமிட்டு கட்டப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய கட்டடம் என்ற பெயர் பெற்ற இந்தக் கட்டடத்தை தாய்வான் அதிபர் சென்சூய்-பையான் நேற்று திறந்து வைத்தார். இந்தக் கட்டடத்தின் தரைதளத்தில் உள்ள கட்டடங்கள் கடந்த ஆண்டே திறக்கப்பட்டன. வார இறுதியில் இந்தக் கட்டடத்தில் உள்ள கடைகளில் கூட்டம் எப்போதும் அலைமோதும்.



சுனாமி அலை பாதிப்பிற்குள்ளான இந்தோனேசிய பெண் ஒருவர் தனது குழந்தையுடன் நலன்புரி நிலையம் நோக்கி செல்கிறார்.

## 'சுனாமி' அலை நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்தமானில் எரிமலை வெடிக்கும் அபாயம்

(புதுடில்லி)

சுனாமி அலை நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்தமானில் கொதிக்கும் சேறு, சகதியை அள்ளி வீசும் எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளது என்று புவியியல் ஆய்வுமைய இயக்குனர் சுஜித்தாஸ் குப்தா எச்சரித்துள்ளார்.

அந்தமான்,நிக்கோபார் தீவில் சுனாமி அலைத் தாக்குதலைத் தொடர்ந்து நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். பலர் சென்னைக்குத் தப்பி வந்தனர்.

இப்போது அங்கு கொதிக்கும் சேறு,சகதியை அள்ளி வீசும் எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளது என்று புவியியல் ஆய்வு மைய இயக்குனர் சுஜித்தாஸ் குப்தா எச்சரித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது:-

அந்தமான்,நிக்கோபார் தீவில் பெரிய நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து சிறிய அளவில் நில நடுக்கம்-நில அதிர்வு காரணமாக நிலத்தடி நீரும் மண்ணும் சேர்ந்து கட்டியாகிவிட்டது. அதாவது உறைந்துவிட்டது. அது மேல் நோக்கி எழுந்து கொதிக்கும் சேற்றை அள்ளி வீசும் அபாயம் உள்ளது. வீசி அடிக்கும் வெப்பம் 100 டிகிரி செல்சியஸ் இருக்கும். அது மனித உடலில் பட்டால் உடல் கருகிவிடும்.

நிலநடுக்கமும் அதைத் தொடர்ந்து நில அதிர்வு காரணமாக கடற்கரையில் நிலச்சரிவு ஏற்படலாம். நில அதிர்வு 10 ஆண்டு நீடிக்கும்.

புவியியல் ஆய்வு மையம், விரைவில் அந்தமானில் நில நடுக்கத்தை கண்காணிக்கும் கருவியும், சுனாமி அலையை எச்சரிக்கை செய்யும் கருவியும் அமைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

அந்தமானில் எங்கும் கடல் நீர் சூழ்ந்து உள்ளது. ஆனால் குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது. அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. அங்குள்ள ஓட்டல்களில் இலவசமாக தண்ணீர் கிடையாது என்று எழுதி வைத்துள்ளனர்.



பாக்தாத்தின் 50 கி.மீ கிழக்கே பஹுஜாவில் ரோந்துப் பணியில் ஈடுபடும் அமெரிக்க கடற்படையினர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக வங்கி 1250 கோடி நிதியுதவி

(வோஷிங்டன்)

'சுனாமி' பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உலக நாடுகள் பணத்தை வாரி வழங்கி வருகின்றன. அமெரிக்கா ரூ.1,500 கோடியை வழங்க முன்வந்துள்ளது.

'சுனாமி' பேரலையால் இந்தோனேசியா, இலங்கை,தாய்லாந்து, மாலைதீவு, பங்காளதேசம், மியான்மார், சோமாலியா, தான்சானியா ஆகிய நாடுகளில் இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர். அதை விட அதிக அளவு எண்ணிக்கையில் காயம் அடைந்தவர்களும், வீடு வாசல் இழந்தவர்களும் உள்ளனர். இவர்களுக்கு உதவ உலக நாடுகள் முன்வந்துள்ளன.

இந்தியா வெளிநாட்டு உதவி தேவை இல்லை என்று கூறி விட்டது. மற்ற நாடுகளுக்கு உதவிகள் குவிந்தன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்படி ஐ.நா.சபை விடுத்த வேண்டுகோளை ஏற்று அந்த அமைப்பிடம் 2 ஆயிரத்து 500 கோடி இந்திய ரூபாய் நிதி குவிந்துள்ளது. இதில் பாதி அதாவது 1,250 கோடி இந்திய ரூபாவை உலக வங்கி வழங்கி உள்ளது.

# அம்பாறை மாவட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்க ஆவன செய்க


## வவு. அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல்

**இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் உறவுகள் அம்பாறை மாவட்டத்திற்கு தமது உதவிகளை அனுப்புமாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு உதவிகளை ஒழுங்கு படுத்தும் ஒழுங்கமைப்பாளரும் வவு. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளருமான ஞானவேல் கேட்டுள்ளார்.**

இது குறித்து விடுக்கப்பட்ட வேண்டுகோளில்,

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பல பகுதிகளிலும் ஏற்பட்ட இழப்புக்களில் இருந்து இன்னும் மீள முடியாது இருக்கும் அதேவேளை, எமது உறவுகளுக்கு பல வழிகளிலும் உதவும் எமது அன்பான உறவுகளே! உங்களின் தொடர்ச்சியான உதவிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு உங்களின் உதவிகள் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் அனைவரின் நோக்கமாகும். ஆகவே நாங்கள் நேரடியாக அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளுக்குச் சென்று எம்மால் கொண்டுசெல்லப்பட்ட பொருட்களை வழங்கி அம்பாறை பகுதிகளுக்கு பொத்துவில் தொடக்கம் தம்பிலுவில் வரை நேரில் பார்வையிட்டோம். உண்மையில் அப்பகுதி மக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்பகுதிகளுக்கு இன்னும் உதவிகள் போதியளவு சென்றடையவில்லை. இவற்றைப் பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள், நலன்விரும்பிகள், கல்விச் சமூகத்தினர் உதவிகளை வழங்கிக் கொண்டு இருப்பவர்கள் அனைவரும் கருத்திற்கொண்டு உங்களது உதவிகளை குறிப்பாக அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்புவதன் மூலம் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கி அவர்களை இப் பாதிப்பில் இருந்து ஓரளவேனும் மீட்க முடியும். ஆகவே இவற்றினை அனைத்து சமூகத்தினரும் கருத்திற் கொண்டு உங்கள் உதவிகளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அனுப்பி உதவுமாறு மட்டக்களப்பு, அம்பாறை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உதவிகளை ஒழுங்கு படுத்தும் ஒழுங்கமைப்பாளராக நியமிக்கப்பட்ட வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் அன்புடன் அனைத்து உறவுகளையும் வேண்டுகின்றார்.

அக்கரைப்பற்று நிவாரணப் பணியினர். தொடர்புகளுக்கு:- 067-2278989 (வினோ), 077-7063395 (தி.ஞானவேல்), 024-2224015 (மாவட்ட அரசியல்துறை செயலகம் வவுனியா).




மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் அவர்கள் நேற்றுமுன்தினம் கடல் கொந்தளிப்பால் பாதிப்புற்ற மக்களுடன் புதுக்குடியிருப்பில் உரையாடுகின்றார்.

# பொருட்கள் வழங்கல்

(திருகோணமலை)

மலேசியாவைத் தலைமையகமாகக் கொண்ட குயெஸ்ட் நெற்றிதம் பவுண்டேஷன் என்ற அமைப்பு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை கடற்பெருக்கினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நேற்று முன்தினம் காலை மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவிடம் கையளித்தது. இந் நிகழ்வு திருகோணமலையில் உள்ள மாகாண பிரதமசெயலாளரின் செயலகத்தில் இடம்பெற்றது. பிரதமசெயலாளர் சி.ரங்கராஜா ஆளுநரின் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். (25)




குருநாகல் மாவட்டம் பொல்காவளையிலிருந்து நிமல வசந்திரசோதிதேரர் குழுவினர் கடல்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களைக் கடந்த வியாழன் அன்று புதுக்குடியிருப்புக்குக் கொண்டு வந்தபோது த.பொ.மே. நி. பொறுப்பாளர் கரிகாலனுடன் உரையாடுகின்றனர். (படங்கள் தவரட்ணம்)

# மூதூர் நலன்புரி நிலையத்திற்கு த.பு.க.ரூபா.2 இல. வழங்கியது

கடற் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட திருமலை மூதூரில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தன்னாலான பங்களிப்புக்களை நல்கி வருகின்றது.

மூதூர் பிரதேசத்தில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களின் பராமரிப்புக்காக அந் நிலையங்களை நிர்வகித்து வரும் முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இரண்டுஇலட்சம் ரூபாவைவழங்கியுதவியுள்ளது. இப் பணத்தைப் பெற்றுக் கொண்ட பள்ளிவாசல் சம்மேளனத்தினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.





வடமராட்சிக் கிழக்குப்பகுதிகளில் இருந்து கடற்கொந்தளிப்பால் இடம் பெயர்ந்த மக்களின் விபரங்கள் செயலணிக்குழுவால் திரட்டப்பட்டு வருவதையும் கடல் அனர்த்தத்தில் காயமடைந்த மக்களுக்கு மருத்துவ உதவிகளைமேற்கொள்ளும் செஞ்சிலுவைச் சங்க தாதிகளையும் படங்களில் காணலாம். (படம் .அ.லோகீசன் வீ.பிரதீபன்)

## -கடல் அனர்த்தத்தின் போது -

# முல்லைத்தீவில் காயமடைந்து கிளி.மருத்துவமனையில் உள்ளோர்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு பகுதியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் காயமுற்று கிளிநொச்சியில் உள்ள மருத்துவ விடுதிகளில் தங்கியுள்ளோர் பெயர் விபரம் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி குழந்தைகள் விடுதி, அவசர சிகிச்சைப்பிரிவு போன்ற விடுதிகளில் உள்ள மக்களின் பெயர் வயது முகவரி என்பன .கிடைக்கப்பெற்றுள்ளன.

அவர்களின் விபரம் வருமாறு:

**ஆண்கள் விடுதி**

வி.வசீகரன் (வயது10) புதுக்குடியிருப்பு,அ.கபிலன் (வயது28) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, அ.மரியரூபன் இரணைப்பாலை, வி.யூட் (வயது 22)இரணைப்பாலை,ம.காத்ரோ(வயது15) கள்ளப்பாடு, முல்லைத்தீவு, சி.கங்காதரன் (வயது27) கள்ளப்பாடு முல்லைத்தீவு, ஆர்.சிவராஜா (வயது17) கள்ளப்பாடு முல்லைத்தீவு,சி.மயில்வாகனம் (வயது56) கள்ளப்பாடு முல்லைத்தீவு, அ.அனிறு (வயது-24) வண் ணாங்குளம் முல்லைத்தீவு, தே.முருகானந்தராஜா (வயது34) வண்ணாங்குளம் முல்லைத்தீவு,விஜய், (வயது26)அம்மன்குளம் முல்லைத்தீவு, எம்.மரியபாலன் (வயது48) முல்லைத்தீவு, மா.இராசமாணிக்கம் (வயது36)கள்ளப்பாடு முல்லைத்தீவு,நவநேசன்(வயது27) அ.வினோத் (வயது12) மந்துவில், த.மனோராஜ் (வயது41) அளம்பில், ரி.கஜேந்திரன் (வயது26), அலோசியஸ்(வயது46) முல்லைத்தீவு, சி.ஜெயகாந்தன்(வயது25) கள்ளப்பாடுமுல்லைத்தீவு, எம்.அமலதாஸ் (வயது 26) இரணைப்பாலை,மா.வடிவேலு (வயது75), சா.சகாயநாதன் (வயது40) கள்ளப்பாடு முல்லைத்தீவு,பகீரதன் (வயது2?),ஸ்ரெனிலன் கபிஸ்ரர் (வயது23) கோயில்குளம் முல்லைத்தீவு,க.காந்தலிங்கம் (வயது39)செல்வபுரம் முல்லைத்தீவு,சா.சான்ஸ் (வயது18) கள்ளப்பாடு முல்லைத்தீவு, த.அமிர்தலிங்கம் (வயது44) முல்லைத்தீவு, பி.சன்முகநாதன் (வயது55) கள்ளப்பாடு முல்லைத்தீவு, த.கிருபாலசிங்கம்(வயது58) அளம்பில்,வி.விஜிநான்(வயது19) கள்ளப்பாடு முல்லைத்தீவு, ஆர்.சுமன் (வயது18) முள்ளியவளை,

**பெண்கள் விடுதி**

ம.தர்சிகா (வயது 10) செந்தளிர் முல்லைத்தீவு, பா.தவமலர் (வயது 14) செந்தளிர் முல்லைத்தீவு, வே.மீனாம்மா (வயது 66) செந்தளிர் முல்லைத்தீவு, திஜாகராஜா சிசிலியா (வயது 48) கள்ளப்பாடு முல்லைத்தீவு, அ.இராசமணி (வயது 48) கள்ளப்பாடு முல்லைத்தீவு, வசீகரன் மேரிஜெனிற்றா (வயது 30) முல்லைத்தீவு, கோவிந்தராசாலீலா (வயது 44)கள்ளப்பாடு முல்லைத்தீவு முத்துலிங்கம் கருணாவதி (வயது 42) முல்லைத்தீவு, செ.ரேணுகா (வயது 28) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, பா.நாகமணி (வயது 47) வள்ளிபுனம் முல்லைத்தீவு, அ.வரதேஸ்வரி (வயது29) முல்லைத்தீவு, இ.விக்டோரியா (வயது 48) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, ந.காசியம்மா (வயது 70) பழங்குடியிருப்பு, சி.கருணா (வயது 16) தீர்த்தக்கரை முல்லைத்தீவு, கு.ஜெனி (வயது 46) மணல்குடியிருப்பு முல்லைத்தீவு, ஆ.பெண்மணி (வயது63) முல்லைத்தீவு, பி.உதயபவளம் (வயது30)கள்ளப்பாடு முல்லைத்தீவு, ஏ.ஜெனோராணி (வயது 38) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, க.புஸ்பமலர் (வயது 30) தீர்த்தக்கரை முல்லைத்தீவு.

**குழந்தைகள் விடுதி:-**

அன்றன் நந்தினிமுல்லைத் தீவு.

**அவசர சிகிச்சைப்பிரிவு**

செல்லையா வசந்தாதேவி (வயது 52)வண்ணாங்குளம் முல்லைத்தீவு,க.ஜெயரூபன் (வயது18) முல்லைத்தீவு. (கு.ச)

# இயற்கை அனர்த்தத்தால் இடம் பெயர்ந்தோருக்கு உதவி

இயற்கை அனர்த்தத்தின் சீற்றம் இன்னும் தொடரலாம் என்ற பயத்தால் பல மாவட்டங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து வவுனியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் 600 குடும்பங்களையும் 05 பராமரிப்பு நிலையங்களை அமைத்து அதில் அவர்களை ஒன்று சேர்த்து வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் , பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்று சேர்ந்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளான மேலதிக உணவுகள் மற்றும் அவசியப் பொருட்களான மருந்துவகைகள்,உடைகள், குழுந்தைப்பராமரிப்புப் பொருட்கள், அடிப்படை சுகாதார வசதிகள், நோயினால் பாதிக்கப்படுபவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் என்பவற்றையும் இரவு பகல் பாராது அங்கேயே தங்கியிருந்து செயற்பட்டு கொண்டிருக்கின்றனர். தொடர்ந்தும் பயம்காரணமாக இரவு பகலாக இடம் பெயர்ந்து வந்து கொண்டிருக்கும் மக்களையும் அனுசரித்து பராமரித்து வருகின்றனர்.

# பழுதடைந்த அரிசி வழங்கியமைக்கு எதிராக

# பிரதேச செயலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம்

சென்றவாரம் கடலில் ஏ ற்பட்ட வெள்ளப்பெருக்கின் கொடூரத்தால் உயிர், உடமை, உறவுகளை இழந்து பெரும் துன்பத்தின் மத்தியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கான உணவுக்கென பருத்தித்துறை பிரதேச செயலர் அரிசி மூடைகளை வழங்கியிருந்தார். இவ் அரிசி பாவனைக்குதவாத நிலையில் இந்த அரிசியை மக்கள் திருப்பி பிரதேச செயலகத்திற்குக் கொண்டு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நலன்புரி நிலையத்தில் வாழும் மக்கள் தமது சோகத்தின் மத்தியிலும் இவ்வாறான ஒரு செயற்பாடு மேலும் துன்பத்தினைக் கூட்டு வதாக அமைந்துள்ளதாகவும் இத னால் வெறுப்படைந்த மக்கள் பருத்தித்துறை பிரதேச செயலரினால் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் தமக்கு மழையில் நனைந்து பழுதடைந்துள்ள அரிசி மூடைகளே அனுப்பி வைக்கப்பட்டிந்ததெனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிய வருகிறது.

இவ்வரிசி பாவனைக்குதவாத நிலையில் உள்ளது. இதனை உண்டால் நோய் பரவும் ஆபத்துள்ளது என தெரிவித்து நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் இவ்வரிசியை எடுத்துச் சென்று பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் கொட்டி பெரும் ஆர்ப்பாட்டம் செய்து கதறி அழுதனர்.

இதனை அடுத்துப் பிரதேச செயலர் தவறுதலாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதென ஏற்றுக் கொண்டதோடு இது தொடர்பாக கவனம் செலுத்துவதாக மக்களுக்குக் கூறியதையடுத்து அவ் விடத்தை விட்டு பாதிக்கப்பட்ட மக்கள் விலகிச் சென்றனர்.

ஆனபோதும் பாவனைக்குதவாத நிலையிலுள்ள இவ்வரிசி இராணுவத்தினருக்கு முன்னர் வந்திருந்ததாகவும் இராணுவத்தினர் பருத்தித்துறை பிரதேசச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பழுதடைந்த அரிசியைக் கொடுத்ததாக அறிய முடிகிறது.

(27) (கா)

# இயற்கை அனர்த்தத்தால்

# இடம் பெயர்ந்தோருக்கு உதவி

இயற்கை அனர்த்தத்தின் சீற்றம் இன்னும் தொடரலாம் என்ற பயத்தால் பல மாவட்டங்களி லிருந்தும் இடம் பெயர்ந்து வவுனியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் 600 குடும்பங்களையும் 05 பராமரிப்பு நிலையங்களை அமைத்து அதில் அவர்களை ஒன்று சேர்த்து வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் , பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்று சேர்ந்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளான மேலதிக உணவுகள் மற்றும் அவசியப் பொருட்களான மருந்து வகைகள்,உடைகள், குழுந்தைப் பராமரிப்புப் பொருட்கள், அடிப்படை சுகாதார வசதிகள், நோயினால் பாதிக்கப் படுபவர்களை உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுதல் என்பவற்றையும் இரவு பகல் பாராது அங்கேயே தங்கியிருந்து செயற்பட்டு கொண்டிருக்கின்றனர். தொடர்ந்தும் பயம்காரணமாக இரவு பகலாக இடம் பெயர்ந்து வந்து கொண்டிருக்கும் மக்களையும் அனுசரித்து பராமரித்து வருகின்றனர்.





பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு கனேடிய தமிழ் வானொலி நிதி சேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அந்நிதிக்கு கனேடிய சிறார்கள் தாம் உண்டியலில் சேமித்த பணத்தை வழங்கிவருகின்றனர். [படம் எழிலன்]

# இயற்கை அனர்த்த துயர் துடைப்பு நிதியம்

# யாழ்.தேசிய எழுச்சிப் பேரவையால் ஆரம்பிப்பு

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலுக்கு அமைவாக தமிழீழ மக்களின் அமைப்பாக தேசிய எழுச்சிப் பேரவை உரு வாக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களது அரசியல், சமூக பொருளாதார வளர்ச்சிக்கான மக்கள் பங்கேற்கும் அமைப்பாகும். அடித்தளத்தில் ஊரக அமைப்பையும் தேசிய அமைப்பை அதி உச்ச அவையாகவும் கொண்டு தமிழ் மக்களது வாழ்க்கை மேம்படுத்தலை இலக்காக வரித்து தேசிய எழுச்சிப் பேரவை இயங்குகின்றது.

கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்த பேரிடர்களினால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாழ்க்கைக்குரிய அனைத்தையும் இழந்துவிட்டவர்கள் தேசிய எழுச்சிப் பேரவை மக்கள் அமைப்பு என்ற வகையில் இப் பேரிடரின் பின் விளைவுகளிலிருந்து மக்களைப் பேணிக் காப்பதுவும் நம்பிக்கை ஒளியூட்டுவதும் தேசிய எழுச்சிப் பேரவையின் பாரிய பொறுப்பாகும். அப்பொறுப்பை சீரியதாக முன்னெடுக்க நிதி மிகவும் அவசியமான்து. இயற்கை அனர்த்தப் பாதிப்பு துயர்துடைப்பு நிதியம் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் இந் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் இறுக்கமான நிதிக்கட்டுப்பாட்டு முறைமைகளினால் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின் ஊடாக இந்நிதி சேகரிப்பு செயற்படுத்தப்படுகின்றது.

மக்களது துயரங்களைத்தாங்கி அவர்களுக்கான எதிர்கால வாழ்க்கையை அமைத்துத் தருவது இங்குள்ள மக்களினதும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம் இனிய உறவுகளதும் கடமையாகும். எனவே யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அனைத்துத் தமிழ் மக்களது நிதிப்பங்களிப்பை வரவேற்கிறது.

# தமது உறவுகள் குறித்த தகவல் கோருகின்றனர்

தமது உறவுகள் குறித்த தகவல்களை அறியத்துடித்துக்கொண்டிருப்பவர்களுக்காகஅகதிகள்புனர்வாழ்வு நிறுவன யாழ்ப்பாண தலைமைச் செயலகம் தகவல்களைப் பதிவு செய்து வருகிறது. இவ்வாறு பதிவு செய்தவர்களின் விபரம் வருமாறு:-

| தேடுபவர் பெயர் | முகவரி | தேடப்படுபவர் பெயர் | முகவரி,தொ.பேசி இல |
|---|---|---|---|
| மரியஜெயசீலன், மரியநாயகி | C/0 பிலிப் மரிய நாயகம்,NO.03 மூன்றாம் ஒழுங்கை, முத்தமிழ் வீதி கொட்டடி | அன்ரன் ஜெயக்குமார், அன்ரன் செபநாயகம், அன்ரன் சாள்ஸ், அன்ரன் விஜித்தன் | செல்வபுரம்,யூதா கோயிலடி முல்லைத்தீவு, 021-2222344 |
| ரி .சின்னத்துரை | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் | புலேந்திரன் பிறேமா குடும்பத்தினர் | நீரூற்று முல்லைத்தீவு |
| பாக்கியநாதன் றெமிந்தன் | 3 ஆம் கட்டை பொலிகண்டி | இராயக்குட்டி கோபிதா, இராயக்குட்டி, ஆசிர்வாதம் பத்திநாதன் | முல்லைத்தீவு 0777-117145,077-6701420 |
| முருகுப்பிள்ளை-கண்ணகியம்மாள் | இன்பருட்டி பருத்தித்துறை | மு. கமல்ராஜ் | அம்பலவன் பொக்கணை, இடைக்காடு முல்லைத்தீவு. |
| மாணிக்கம் இந்திராதேவி. | 1 ஆம் கட்டைவியாபாரி, மூலை பருத்தித்துறை | தேவராஜா தேவராணி, தே. தேவகுமாரி, தே.தேவகுமார் | கள்ளப்பாடு முல்லைத்தீவு. |
| அ. நாதன் | 64,பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். | டேவிற் மணி, டேவிற் சிம்சன்,டேவிற் ஜோன்சன், டேவிற் வனஜா. | 3 ஆம் கட்டை சிலாவத்தை, முல்லைத்தீவு .077 6146367 |
| அ. நாதன் | பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். | விக்கி,விக்கிரேவதி,கில்டா விக்கி. | conventவீதி முல்லைத்தீவு. 077-6146369 |
| தெய்வேந்திரன் ஜெகநாதன் | 52 லேட்டஸ் றோட், வண்ணார் பண்ணை. | யோகநாதன். | கள்ளப்பாடு முல்லைத்தீவு 021-2223107 |
| சரஸ்வதி தியாகராசன் | காணிப்பதிவகம் பருத்தித்துறை. | கணபதிப்பிள்ளை பாலமுரளி,பா.லக்ஷி, பா.சுவேதா | செல்வபுரம் முல்லைத்தீவு 021-2223272 |
| றொபேட் நவரத்தினம் யனிபேட் | பொற்பதி குடத்தனை, தற்போது வரணி மகாவித்தியாலயம் சாவகச்சேரி. | பிலுப்பையா அன்ரன், பிலுப்பையா திருச்செல்வம், பிலுப்பையா பாக்கியநாதன். | மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு |
| நல்லதம்பி,சறோஜா | குடத்தனை வடக்கு, மருதங்கேணி | சுதாகரன் ,கேசவன் , நல்லதம்பி, | குடத்தனை வடக்கு மருதங்கேணி, வண்ணாங்குளம், முல்லைத்தீவு. |

உறவுகளைத் தேடுவதற்கான தொடர்பு மையம் ஒன்றை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம் தலைமைச்செயலகத்தில் ஆரம்பித்துள்ளது காலை 7.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை உறவுகளைத் தேடுபவர்கள் இத்தகவல் மையத்திற்கு தெரியப்படுத்துவதன் ஊடாக தங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். முகவரி உறவுகளைத் தொடர்புபடுத்தும் தகவல் மையம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,இல,106, 4 ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல :-021 2222416,ஈமெயில்:-trro@sitnet.lk

# பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர

# ஏனையவை 10ஆம் திகதி திறப்பு

பேரழிவினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனையவை புதிய தவணைக்காக 10ஆம் திகதி திறக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்துதல் 70 நிலையங்களில் நாளை மறுதினம் (திங்கட்கிழமை) ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வடமராட்சி மணற்காட்டுப்பகுதியில்

# யாழ்.தமிழ் மாணவர் ஒன்றியம் மீட்புப்பணி

(யாழ்ப்பாணம்)


26.12.2004 அன்று இடம் பெற்ற கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்ட உயிரிழப்பு, உடமையிழப்பு என்பன கரையோர வாழ்மக்களிற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 27ஆம் திகதி வடமராட்சி மணற்காட்டிற்கு விரைந்து தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையிலான குழுவினர் அங்கு மீட்புப்பணியில் ஈடுபட்டனர். பல சடலங்களும், மிகமுக்கியமான ஆவணங்கள் என்பனவும் மீட்கப்பட்டு மணற்காடு தேவாலய பாதிரியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பணியில் தொடர்ந்தும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அயராது கடமைகளில் ஈடுபட்ட வண்ணம் உள்ளனர். தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொருட்கள், ஆடைகள் என்பன வடமராட்சி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (33)


# அள்ளித்தந்த கடலன்னையின் கோரமுகம் கண்டு துவண்டு போயுள்ள உறவுகள்

சிறிலங்கா அரசாங்கங்களினால் ஈழத் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் போருக்கும் அதனால் விளைவிக்கப்பட்டிருக்கும் கொடுமைகளுக்கும் முகம் கொடுத்து துவண்டுபோய் மீளெழுந்து கொண்டிருந்த மக்களை மீண்டுமொரு முறை பெரும் அழிவுக்குள் தள்ளி தத்தளிக்க வைத்திருக்கிறது சுனாமி எனப்படும் பாரிய கடல் அலையின் தாக்கம்.

அரசபடைகளின் துல்லியமான இலக்குகளாக இனங்காணப்பட்டு தகர்த்தழிக்கப்பட்டு வந்த தமிழர்களின் குடியிருப்புக்களும், பாடசாலைகளும், வழிபாட்டுத்தலங்களும், மக்கள் கூடும் இடங்களும் இன்று அதிலும் விட மிகத் துல்லியமான இலக்காகத் தெரிவு செய்து இக்கடல் அலைகள் தாக்கி முற்றாக அழித் துள்ளன.

நீண்டகாலப் போருக்கு முகம் கொடுத்த மக்கள் அரசபடையின் பாரிய படையெடுப்





பிற்குக் கூட தாக்குப்பிடித்த தமிழ் உறவுகள் இன்று அலை கொண்டுபோய் ஊரே சுடுகாடாகியுள்ள நிலையில் துவண்டு போயுளளனர். பல ஆயிரக்கணக்கானோரைப் பலியெடுத்தும் பல ஆயிரக்கணக்கானவர்களைக் காயப்படுத்தியும், பெருந்தொகையானோரை இடம்பெயர வைத்ததோடு மட்டும் நின்றுவிடாமல் மக்களின் அடுத்த நகர்விற்கான அத்திவாரத்தினையே வேரோடு பிடுங்கி எறிந்துள்ளது. கடற்கரையில் குடியிருப்புக்களை அமைத்து கடலையே நம்பி வாழ்ந்த எத்தனை உறவுகளின் உயிர்களைக் குடித்து தன் பசி தீர்த்தாள் கடலன்னை.

கடல் அன்னையின் சாந்த முகத்தைப் பார்த்து மகிழ்ந்து அள்ளித்தந்த அன்னையைப் போற்றி வாழ்ந்த எம் மக்கள் அவளின் கோரமுகம் கண்டு தூற்றுகின்ற நிலைக்கு மனங்களை கொந்தளிக்க வைத்துள்ளாள் கடலன்னை. இவ்வலைகளில் சிக்குண்டு சிதறுண்டு போன உறவுகள் எத்தனையோ, அத்தனை மனக் குமுறலையும் சுமந்தபடி அலைகளால் அள்ளி எறியப்பட்டு மரங்களோடும் மதில்களோடும் முட்டி மோதுண்டு உயிர்தப்பி உடல் நலிந்து நடைப்பிணமாய் வாயசைக்கும் உடல்களிலிருந்து வாய்பிதற்ற வருகின்ற உணர்வலைகள் கடலலையில் தாம் தவித்த கதறல்கள் இவ்வாறு அமைகின்றன.

" அன்று காலை 9.00 மணியளவில் நான் வவுனியா செல்ல தயாராகிக் கொண்டிருந்த வேளை வீட்டுக்கு வெளியேவந்து நின்ற எனது மகள் அம்மா கடல் அலையெல்லாம் எங்கட வீட்டுக்கு மேலே வருகுது என்று கூற நானும் பார்த்து விட்டு பிள்ளைகளை ஓடச் சொல்லி விட்டு நானும் ஓடினேன். என்னால் ஓட முடியாமல் போக விழுந்து விட்டபிறகு அலை என்னைப் தூக்கிக் கொண்டு போய் மரங்கள், வேலிகள் எல்லாவற்றிலும் மோதியது. அப்போது எனக்கு தெரிந்த ஒரு பெடியன் என்னை பிடித்துக் கொள்ள அப்படியே நீண்டதூரம் கொண்டு சென்றதோடு நான் சுயநினைவை இழந்து விட்டேன். நான் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தவுடனேயே எனது வீடு உடைந்து தரைமட்டமானதை நேரடியாகவே பார்த்தேன். அத்தோடு எனது கணவரும் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்று கூட எனக்குத் தெரியாது. எங்கள் ஊர் அனைத்துமே அடியோடு அழிக்கப்பட்டுக் கொண்டு அலையோடு வருவதை நான் நேரடியாகவே பார்த்தேன். அத்தோடு அயலில் இருந்த மக்களில் அனேகமான வர்கள் இறந்து போய்விட்டார்கள்" என கூறு கின்றார் சிலாவத்தைத் தீர்த்தக்கரையைச் சேர்ந்த அந்தோனிக்கா என்பவர்.

" அன்று காலை திடீரென வெடிச்சத்தம் போல ஒரு பெரும் சத் தம் கேட்டது. உடனே நாங்கள் பார்த்தபோது கடல பெருக்கெடுத்து எங்களை நோக்கிப் பெருமளவில் வந்து கொண்டிருந்தது. நாங்கள் உடனே எல்லோரும் ஓட ஆரம்பித்தோம். ஓடிக் கொண்டிருக்கும் போதே என்னைச் சுற்றி நீர் வந்து விட்டது. அப்படியே போய் ஒரு குளத்திலபோய் இறங்கினேன். இறங்கிய உடனேயே பெருமளவில் அலையால் கொண்டு வந்த குப்பைகள் என்னை மூடிவிட்டது. பிறகு அலை என்னை உருட்டிக் கொண்டே போய்க்கொண்டிருக்க திடீரென பெரிய எண்ணை பரல் ஒன்று அடிபட்டு வந்தது. நான் உடனே அதைப் பிடித்து நீரில் மிதந்து கொண்டு போனேன். ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் வரை நீரில் தத்தளித்துக் கொண்டு சென்ற பின் இரண்டு பனைகளுக்கிடையாகச் சென்று தூக்கி வீசப்பட்டேன் அதன்பிறகு தான் நான் சிலாவத்தைக் கரையில் வீசப்பட்டுள்ளதை உணர்ந்தேன். எனக்கு உடனே உடல் முழுவதும் எரிவது போல் இருந்தது. அதன்பிறகு தான் எனது உடலில் நிறையக் காயங்கள் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன். கிட்டத்தட்ட 30 அடி உயரம் அளவில் நீர் பெருக்கெடுத்திருந்தது. நான் அடிபட்டு வந்துகொண்டிருக்கும் போது நிறையப் பிள்ளைகளும் அடிபட்டு வந்து கரையில் மயங்கிக்கிடந்ததை காணக் கூடியதாக விருந்தது. இந்த சம்பவத்தில் எனது மூத்த மகளைக் கடல் கொண்டு போயிட்டுது" என கண்களில் நீர் கசியக் கூறி முடித்தார் குயிற்றன் எனும் 47 வயது குடும்பஸ்தர்.

இச்சம்பவம் பற்றி 14 வயது நிரம்பிய



சுவேந்திரன் எனும் சிறுவன் இவ்வாறு கூறுகிறான். "கடற்கரையை அண்டியதாகவே எங்கள் வீடு இருந்தது. நான் அன்று வீட்டில் தனித்தே இருந்தேன். எனது பெற்றார் வெளியே சென்றிருந்தார்கள். அப்போது பெரும் இரைச்சல் சத்தம் ஒன்று கேட்டது. நான் பார்ப்பதற்காக வீட்டு வாசலில் வெளியே வந்த உடனேயே நீர் என்னைத் தூக்கிக் கொண்டு உடைந்த வீடுகளுக்கு மேற்பகுதியால் கொண்டு வந்து மரங்களில் மோதியடித்தும் தேய்த்தும் கொண்டுவந்து நகரப்பகுதியில் போட்டது. என்னை நீர் பலவாறு வதைப்படுத்தியே கொண்டு வந்து போட்டதால் மயக்கமுற்றேன் பிறகு ஒரு அண்ணா என்னைத தூக்கிக் கொண்டு வந்து வாகனத்தில் ஏற்றினார். என்னோடு அனேகமான காயக்காரர்கள் ஏற்றப்பட்டு கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள். எனது பெற்றோருக்கு பெரிய காயமில்லை. அவர்கள் இப்பொழுது முள்ளியவளையில் இருக்கிறார்கள் எனக் கூறிய அவரின் முகம் உட்பட அனைத்துப்பகுதிகளும் காயங்கள் காணப்பட்டன.

இவ்வாறான அனர்த்தங்களின் விளைவுகளின் பின் மீட்புப்பணிக்கு தயாராக வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்போது தான் அலையின் இழப்புக்கள் எந்த அளவான தென்பது உணரக் கூடியதாக இருந்தது. அனர்த்தம் நடந்த அடுத்த மணிநேரம் தொடக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் சகலதுறையினரும் தமிழீழ தேசியத் தலைவரின் பணிப்பிற்கிணங்க இயந்திர வேகத்தில் செயற்பட ஆரம்பித்தனர்.

இறந்த சடலங்களை மீட்கும் பணியில் ஒரு பகுதியினரும், காயமடைந்த மக்களை வைத்தியசாலைக்கு அனுப்பி சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றுவதில் ஒரு பகுதியினரும், ஏனைய மக்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி அவர்களுக்குத் தேவையான அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒரு பகுதியினரும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.


இவ்வாறு ஒவ்வொரு பகுதியாக ஈடுபட்டு முல்லைத்தீவு பகுதியில் இருந்த சடலங் களை சம்பவதினத்தன்றும் அடுத்த நாள் மாலை வரை மீட்கப்பெற்ற சடலங்களை மாவட்ட அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் சடலங்களை முள்ளியவளை கற்பூரப் புல்வெளி மயானத்திலும் அதற்கு அண்மித்த ஓர் இடத்திலும் இரண்டு பிரிவாக அடக்கம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

அதேபோன்று புதுக்குடியிருப்பு பகுதிக்கு எடுத்து வரப்பட்ட சடலங்களை வைத்தியசாலையில் இருந்து கொண்டு செல்லப்பட்டு ஓட்டுசுட்டான் வீதியில் ஓர் இடம் தெரிவு செய்யபபட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

இந்த இரு பகுதிகளிலும் சடலங்கள் அடக்கம் செய்வதில் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள்,பொதுமக்கள், தமிழீழக் காவல் துறையினர், உதவி அரச அதிபர்கள், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், வர்த்தக சங்கஊழியர்கள் எனப்பலரும் முனைப் புடன் செயற்பட்டனர்.

மறுபுறம் ஏனைய சடலங்களுக்குரிய அல்லது உறவினர்கள் கண்டெடுத்த சடலங்களை அவர்கள் தமக்குரிய விதிப்படி அடக்கமோ தகனமோ செய்து கொண்டனர். இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட சடலங்களில் பெரும்பாலானவை அடையாளம் காணப் படாத நிலையிலேயே அடக்கம் செய்யப்பட் டுள்ளன. அத்துடன் அடுத்தடுத்த நாட்கள் மீட்கப்பட்ட சடலங்கள் அனைத்தும் அந்தந்தப் பகுதியில் வைத்து தகனம் செய்யப்பட்டு வந்தன. இவ்வாறு ஒட்டு மொத்தமாக இன்று வரை முல்லைத்தீவுப் பகுதியில் மட்டும் 1622 சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் காணாமற் போனோர் தொகை 3180 இற்கும் மேல் என கணக்கிடப்பட்டுள்ளது.

இதற்கும் முதற் பணி அன்று காயப்பட்ட மககள் உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும், முள்ளியவளை வைத்தியசாலையிலும், வைத்து முதலுதவிகள் வழங்கப் பெற்று, அடுத்த கட்டமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கும், வவுனியா



மாவட்ட வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டனர். அந்தப் பணிகளை வைத்தியசாலை வட்டாரங்களும் தமிழீழ மருத்துவப்பிரிவினரும் திலீபன் மருத்துவ சேவையினரும் முன்னெடுத்துச் செய்து வந்தனர். தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்கள் இவ்வாறு காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 4817 பேர் ஆகும்.அடுத்த கட்டமான மிகப் பெரிய பிரச்சினை பாதிப்புற்ற மக்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துப் பராமரிப்

இ.சசிக்குமார்
த.குகனேஸ்வரன்

பது. அந்தப் பெரிய பிரச்சினையைச் சுலபமான முறையில் கையாளுவதற்காக தமிழீழ திட்டமிடல் பணியகத்தினால் ஒரு அவசர கால செயலணிக்குழு ஒன்று நியமிக்கப் பட்டது.

இந்த அவசர கால செயலணிக்குழு இரண்டு பிரிவாகச் செயற்பட்டது. ஒன்று முள்ளியவளை பகுதிக்குரிய செயலகம், அடுத்தது புதுக்காட்டுச் சந்திக்குரிய செயலகம். இவ்விரு செயலகங்கள் ஊடாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த அவசரகால செயலணிக்குழு முதற்கட்டமாக அந்தப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களையும் அங்கு வாழும் குடும்பங்களையும் அவர்களின் அங்கத்தவர்களின் முழு விபரத்தையும் உடன் சேகரித்துக் கொண்டு அதற்கேற்ப நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றது.

இதில் ஒரு விடயம் என்னவெனில் சம்பவதினம் அதற்கு அடுத்த நாட்களுக்குரிய உடனடி தேவைகளை உடனுக்குடன் பொது மக்களும் போராளிகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் ஏனைய தொண்டர் நிறுவனங்களுமே அந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். உடை.குடிநீர், இருப்பிட வசதி, மருத்துவம் என்பனவற்றை இவர்களே உடனடியாக மேற்கொண்டனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

## உலகில்...


### சனவரி

04.:12ஆவது சார்க் உச்சி மாநாடு பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள யின்னா நிலையத்தில் வைபவரீதியாக ஆரம்பம்.



08:ஈராக்கின் பாலூஜா நகரில் பிளாக் ஹவாக் (Bldakhawk) அமெரிக்க உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது.

12:- உலகின் மிகப்பெரிய கப்பலான "குயின்மேரி" தனது கன்னிப்பயணத்தை ஆரம்பித்தது. இக்கப்பல் 345 மீற்றர் நீளம் 236 அடி உயரம் உடையது. 2620 பயணிகள் பயணம் செய்யமுடியும். இந்தக் கப்பல் 80 கோடி அமெரிக்க டொலர் செலவில் கட்டப்பட்டது.



15: இந்தியாவிற்கும் பாகிஷ்தானுக்கும் இடையேயான ரயில் போக்குவரத்து 2 வருடங்களின் பின் ஆரம்பம்.

18: பாக்தாத்தில் அமெரிக்க தலைமையகக் கட்டட வாயிலில் கார்க் குண்டு வெடிப்பில் 25 பேர் கொல்லப்பட்டனர். 99 இற்கும் அதிகமானோர் காயம்.


23: தமிழ்நாடு திருச்சி திருவரங்கம் திருமண மண்டபத்தில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் மணமகன் உட்பட 55 பேர் உயிரிழந்தனர். மணமகள் உட்பட 100பேர் படுகாயமடைந்தனர்.



24: நாஸாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அனுப்பிய ஒப்பரியூனிட்டி விண்கலம் செவ்வாயில் இறங்கியது.

### பெப்ரவரி


01:சவுதி ஆரேபியாவின் மெக்காவுக்கு அருகே மதீனாவில் ஏற்பட்ட மக்கள் நெரிசலில் 250 பேர் பலி,244 இற்கு மேற்பட்டோர் காயம்.



பாக்தாத்திலிருந்து வடக்கே 320 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குர்திஸ் நகரத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உதவிப்பிரதமர் உட்பட 67பேர் பலி, 235 பேர் படுகாயம்.



06: இந்தியப்பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.



07: பொடோ சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ம.தி.மு.க. பொதுச் செயலர் வை.கோ. வேலூர் சிறைச் சாலையிலிருந்து விடுதலை.

18: ஈராக்கின் கோரஸ்ஸன் மாகாணத்தில் நெஷாப் என்ற நகருக்கு அருகில் கந்தகம், பெற்றோல், உரம் ஆகியவற்றை ஏற்றி வந்த ரயில் தடம் புரண்டு தீப்பிடித்ததில் 300 பேர் பலி, 450 பேர் படுகாயம், 5கிராமங்கள் அழிந்தன.

24:மொரோக்கோ நாட்டின் துறைமுக நகரான அல்கோசிமியாவில் இடம்பெற்ற பூகம்பத்தினால் 500 இற்கும் அதிகமானோர் பலி, நூற்றுக்கணக்கானோர் படுகாயம்.

25: அமெரிக்க விமானப்படைக்கும், இந்திய விமானப்படைக்கும் இடையில் முன்னொருபோதும் இல்லாத வகையில் மிகப்பெரிய போர்ப்பயிற்சி ஒத்திகை (COMBAT EXERCISE) ஆரம்பமானது.

### மார்ச்

15: பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் பிரிந்து செல்வதற்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன் மேற்கொண்ட திட்டத்திற்கு இஸ்ரேல் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.



22 பலஸ்தீனத்தின் காஸாப்பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவரும் ஸ்தாபகருமான ஷேக் அகமத்ஜாஷீன் இஸ்ரேலியர்களின் உலங்கு வானூர்தி தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஆன்மீகத்தலைவர் கொல்லப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.



29:10 வருடங்களின் பின்னர் சீனப் பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம்.

கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த எஸ்தோனியா, லிதுவேனியா, பல்கேரியா, ரோமானியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா ஆகியநாடுகள் நேட்டோ அமைப்பில் சேர்க்கப்பட்டன.

### ஏப்ரல்

17: ஹமாஸ் இயக்கத்தின் உயர்தலைவரான அப்துல் அஸீஸ் "அல்ரன்டிறி" பயணம் செய்த கார்மீது இஸ்ரேலிய உலங்குவானூர்தி நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார்.




22: வடகொரிய நகரான பியோங் ஜோங்கிலிருந்து 50 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள ரைபொங் கொன்ரயில் நிலையத்தில் எரிபொருளை ஏற்றி வந்த ரயில்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் 54பேர் பலி, 1500 பேர் காயம், 6850 குடியிருப்புக்கள் அழிந்தன.

### மே

13.இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெரும் வெற்றி. அடல் பிஹாரி வாஜ்பாய் தனது பதவியை இராஜிநாமாச் செய்தார்.


15.காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவியாக சோனியா தெரிவு



16.ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப் படையினருக்கு மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றும் 2 ஈராக்கியப் பெண்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

17.கொண்டுராஸ் நாட்டில் சாண்டு பொட்ரோ சூலோ நகரில் உள்ள சிறைச் சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 100 கைதிகள் தீயில் கருகினர்.


19.காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி சார்பில் இந்தியாவின் அடுத்த பிரதமராக மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான மன்மோகன்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



### ஜூன்

3. அமெரிக்காவின் உளவுத்துறை நிறுவன சி.ஐ.ஏ.யின் இயக்குநர் ஜோர்ஜ் கெனட்டின் பதவி விலகல் குறித்து அமெரிக்க சனாதிபதிக்கு அறிவிப்பு, 24 மணி நேரத்தில் இரண்டாவது அதிகாரியான சென்பரிட்டும் பதவி விலகல்.

06.அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி ரொனால்ட் றீகன் 93 வயதில் காலமானார்.



இரண்டாவது உலகப் போரின்போது ஹிட்லரின் படைகளைத் தோற்கடித்து அடித்தளமிட்ட நோர்மண்டித் தரையிறக்கத்தின் 60 ஆவது ஆண்டு நினைவு தினம் பிரான்சில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.



12. ஈராக் இடைக்கால அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பஸ்ஸாம் கூபா தலைநகர் பாக்தாத்தில் சுட்டுக் கொலை.

19.ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் பெண்கள் சிறுவர்கள் உட்பட 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



26. பாகிஸ்தான் பிரதமர் பைருல் லாகான் ஜமாலி தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

28. பாகிஸ்தானின் இடைக்காலப் பிரதமராக முஸ்லிம் கட்சியைச் சேர்ந்த சுஜந்த கசைல் பதவியேற்றார்.


30. முன்னாள் ஈராக்கிய சனாதிபதி சதாம் உட்பட 11 பேர் ஈராக்கிய இடைக்கால அரசின் சட்ட நடவடிக் கைகளுக்காக அமெரிக்காவினால் கையளிக்கப்பட்டனர்.

### ஜூலை

01. தேரோட்டம் நடத்த சிவகங்கை மாவட்டம் கண்ட தேவ கிராமத்திற்கு தடையை மீறிப்புறப்பட்டுச் சென்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் உட்பட 200 பேர் பொலிசாரால் கைது.

சவுதியரேபியாவில் உள்ள அல்ஹைதா உறுப்பினர்களின் ஆன்மீகத் தலைவராக இருந்த அப்துல்லாஹித் அர்ரஸத் சவுதி பாதுகாப்பு அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

02. தமது உரிமைகளை வழங்கக் கோரி பெருமளவு ஹொங்கொங் மக்கள் சீன அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்.



# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

☛ தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) பிராந்திய அமைப்பில் உறுப்பு நாடாகப் பாகிஸ்தான் முறைப்படி சேர்க்கப்பட்டது.

☛ 04.நியூயோர்க்கில் விமானங்கள் மோதித் தகர்ந்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள் இருந்த இடத்தில் " சுதந்திர கோபுரம்" எனப்படும் உலகின் மிக உயரமான கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

☛ 16. கும்பகோணத்தில் உள்ள தனியார் பாடசாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 80 பாலகர்கள் உடல் கருகிப் பலி; பலர் படுகாயம்.




☛ 28. [illegible] வடக்கே [illegible]க்குபா நகரில் பொலிஸ் நிலையம் ஒன்றிற்கு வெளியே காவல்துறையில் இணைவதற்கு நின்றோர் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 70 பேர் உடல் சிதறிப் பலி.




## ஆகஸ்ட்

☛ 01.தென் அமெரிக்க நாடான பராகுவேயின் தலைநகர் அகன்சியா நகரில் உள்ள வணிக வளாகமொன்றில் இடம் பெற்ற பாரிய தீ விபத்தில் 283 பேர் உடல் கருகிப் பலி, 200 இற்கும் மேற்பட்டோர் காயம்.




☛ 03.புதன்கிரகத்தின் மர்மங்களை அறிவிப்பதற்காக நாஸாவின் மென்சர் செயற்கைக்கோள் விண்ணிற்குப் புறப்பட்டது.



☛ ம.தி.மு.க. செயலர் உட்பட மூவாயிரம் பேர் தமிழக மக்களைச் சந்திப்பதற்கான நடைப் பயணம் ஆரம்பம்.

☛ 09.ம.தி.மு.க செயலாளர் வை.கோ உள்ளிட்ட 9 பேர் மீதான பொடோ வழக்கினை தமிழக அரசு வாபஸ்.

☛ 13.ஒலிம்பிக்கின் தாயகம் என அழைக்கப்படும் கிரேக்கத்தின் தலைநகர் எதென்சில் 28 ஆவது ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகியது.



புருண்டியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள "ருட்ஸி" இன அதிகாரிகள் முகாம் மீது டுட்டு இனக்கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்டோர் பலியானதுடன் 110 பேர் காயம்.

☛ 31.ஈராக்கிய தீவிரவாத குழுவொன்றினால் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 நேபாள நாட்டவர்கள் தீவிரவாதிகளினால் கொலை செய்யப்பட்டனர்.



## செப்ரெம்பர்

☛ 01. ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள பாடசரலையில் பாடசாலைச் சிறுவர்கள் 200 பேர் உட்பட 400 பேர் செச்சினிய ஆயுததாரிகளினால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.




## ஒக்டோபர்

☛ 18. தமிழ்நாடு கர்நாடக மாநிலங்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய சந்தன மரக்கடத்தல் வீரப்பனும் அவனது சகாக்கள் மூவரும் தமிழ்நாடு கர்நாடக விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொலை.



## நவம்பர்

☛ 03. அமெரிக்க சனாதிபதி தேர்தலில் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீண்டும் வெற்றி பெற்றார்.



☛ 11.பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் மரணம்.



☛ காந்திபுர சங்கர மடத்தின் முன்னாள் பணியாளர் சங்கரராமன் கடந்த செப்ரெம்பர் மாதம் கொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் பலர் கொடுத்த வாக்கு மூலத்தினடிப்படையில் காஞ்சிபுரம் சங்கரமட ஆச்சாரியரான ஜெயேந்திரர் தமிழகப் பொலிசாரால் கைது.



☛ 12.அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல் பதவியினை இராஜிநாமாச் செய்துள்ளார்.

☛ 14.யசீர் அரபாத்தின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வில் தற்காலிக அதிபர் முகமது அப்பாஸை குறிவைத்து நடத்திய தாக்குதலில் 2 மெய்ப்பாது காவலர்கள் பலி; 5 பொதுமக்கள் காயம்.








☛ 22.பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவர் ஜர்தாரி 8 ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

## டிசம்பர்

☛ 05.பெங்களூரில் நடைபெற்ற பெடரேசன் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் டெம்போஸ் போர்ட்ஸ் கிளக் கோப்பையை வெல்லக்காரணமான பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ டெலிமா ஜீனியர் மைதானத்திலே உயிரிழந்தார்.



☛ 09.சீனாவில் ஷான்சி மாகாணத்தின் யாங்யுவான் நகரில் உள்ள நிலக்கரிச்சுரங்கத்தில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 33 பேர் பலி.


☛ 10கென்யாவில் பல கோடிமரங்கள் நட்டு பசுமைப்புரட்சி செய்த "வங்காரி மாத்தாய்க்கு" ஒலோ நகரில் நோபல் பரிசு வழங்கல்.



☛ 11. பிரபல கர்நாடக இசைப்பாடகி சுப்புலட்சுமி மரணம்

☛ 19.சங்கரராமன் கொலை சூத்திரதாரியின் முக்கிய குற்றவாளி அப்பு கைது.

☛ 26. தென்னாசிய நாடுகளான இந்தோனேசியா,மலேசியா சிங்கப்பூர் பாங்கொங்,மாலைதீவு, இந்தியா ஆகிய இடங்களில் ஏற்பட்ட பூகம்பத் தினாலும், கடற்கொந்தளிப்பினாலும் ஆயிரக் கணக்கானோர் உயிரிழப்பு. ஆயிரக் கணக்கானோர் காயம். பல்லாயிரக்கணக்கானோரைக் காணவில்லை.





# தமிழீழத்தின் நீண்ட கரையோர பிரதேசம் அழிவடைந்து கிடக்கின்றது



தமிழீழத்தின் கரையோரப் பிரதேசங்களில் இருந்து சுமார் இரண்டாயிரம் கிலோமீற்றர் அப்பால் அந்தமான் கடற்பரப்பில் உருவாகிய கடற்புவி நடுக்கத்தின் தாக்கம் தமிழீழத்தின் கரையோரப் பிரதேசங்களை பேரலைகளாக எழுந்து தாக்கிப்பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை உருவான இந்தக் கடற்பெருக்கினால் இலங்கைத்தீவில் பாரிய அழிவுகள் ஏற்பட்ட பகுதி தமிழர் தாயகப் பகுதியாகும். தமிழீழத்தின் கிழக்குக் கரையோரப் பகுதி முற்றுமுழுதாகவே அழிவடைந்து போய்விட்டது. கரையோரப் பகுதி முழுமையாக அழிவடைந்து போனது மட்டுமன்றி அல்லும் பகலும் கடலுடன் போராடி மீன்பிடித்தொழில் செய்கின்ற மீனவ சமூகம் சொல்லமுடியாத பாதிப்படைந்து போய் விட்டது. எஞ்சி இருக்கின்ற பலரது தொழில் உபகரணங்கள் முழுமையாகச் சிதைக்கப்பட்டுள்ளன. பெருங் கடற்பரப்பைத் தன்னகத்தே கொண்ட தமிழர் தாயகத்தில் "சுனாமி" அலைகளின் தாக்கம் வெகுவாக இருந்தது. இதனால் மீளமுடியாத இழப்புக்குள் கடற்றொழிலாளர் சமூகம் முழுவதும் உள்ளாகியிருக்கிறது.

முன்னெப்போதும் இத்தகைய இயற்கை அனர்த்தத்துக்குள்ளாகாத மக்கள் என்பதாலும், அதில் இருந்து பாதுகாப்பது போன்ற வழிமுறைகள் எதுவும் அறியாதிருந்தமையாலும் என்ன நடக்கிறது என்று தெரியாமலே கடலுடன் அடியுண்டு போனார்கள். இவ்வாறு அடியுண்டு போனவர்களில் பெண்களும், சிறுவர் சிறுமியர்களும்தான் அதிகமானவர்கள். மக்களின் கிராமங்கள் அனைத்துமே கற்குவியல்களாகவும் மணற்தரைகளாகவும் காட்சி தருகிறது. பல்லாயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான மக்களின் சொத்துக்கள் அழிவடைந்துவிட்டன.

இந்தக் கடல் அனர்த்தத்தினால் அழிவடைந்தது தமிழீழத்தின் பொருளாதார வலுவை கட்டிஎழுப்பும் முக்கிய தொழிற்றுறையான மீன்பிடித்தொழில், ஏற்கனவே மீன்பிடித் தொழிலாளர்கள் அதாவது கரையோர மக்கள்

**அஃலோகீசன்**

சிறிலங்கா அரசின் அனைத்து அடக்கு முறைகளுக்குள்ளும் உள்ளாகிப் பெரிதும் நொந்து போயிருக்கிறார்கள். அதாவது கடந்த இருதசாப்த காலத்துக்கு மேலாக தமிழ் மக்கள் மீது சிங்கள அரசின் அடக்குமுறைப்போர் முனைப்புப் பெற்றது. முதற் கடற்படையின் த்தாக்குதல்களால் இவர்களே பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தார்கள்.

கடல்வலயத்தடைச்சட்டம் இவர்கள் மீது பிறப்பிக்கப்பட்டு மீன்பிடிப்பதற்கான தூர,நேரக் கட்டுப்பாடுகள் போடப்பட்டன. மீன்பிடி உபகரணங்கள் மீது முழுமையாகப் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டு கடற்றொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்திருந்தது. சிங்களஅரசு இதுமட்டுமன்றி தினமும் கடற்படையின் தாக்குதல்களால் கடலுக்குஇரையாகிப் போகின்ற பேரவலம் கரையோர மக்களின் 20 வருடங்களுக்கும் மேலான வரலாறு.

சிங்கள அரசாங்கங்களின் இத்தகைய நடவடிக்கைகளால் வாடிவதங்கி வறுமை நிலையில் இருந்த இந்த மக்களுக்கு அண்மைய சமாதானம் ஒருசிறு இடைவெளியைத்தந்திருந்தது. இந்தக் காலத்தில் கரையோர மக்கள் குடும்பங்களாகவே வருந்திக் கடலுடன் போராடித் தமது பொருளாதாரத்தை சிறு துளித்துளியாக கட்டி எழுப்பியிருந்தனர் சிலதொழில் உபகரணங்களைப் புதிதாகப் பெற்று தமது தொழிலை முன்னேற்றி சிறிது சிறிதாக தமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டிருந்தனர்.


இந்த வேளையில் இவர்கள் உயிரைக் கொடுத்து பெரும் அபாயநிலையில் கடலுடன் போராடி சேர்த்த சொத்துக்களை ஒரு நொடிப்பொழுதில் கடல் அடித்துச் சென்றுவிட்டது. எந்தக் கடலுடன் போராடி அவர்கள் தமது வயிற்றை வளர்த்தார்களோ, இரவு பகலாக எந்தக் கடலுடன் கூடிக்குலாவிப் பொருளாதாரத்தை வளர்த்தார்களோ அந்தக்கடலே அவர்களது உயிரையும், அவர்கள் அல்லும் பகலும் ஓடாய் உழைத்துச் சேர்த்த சொத்துக்களை எல்லாம் கிராமங்களாகவே கொண்டு போய் விட்டது.

தமிழீழ தேசத்தின் யாழ்ப்பாணம் முதல் அம்பாறை வரையான நீண்டுவிரிந்துள்ள கரையோரம்முழுவதையுமே கடலடித்து கற்குவியலாக்கியிருக்கிறது பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அழித்திருக்கிறது. இந்தச் சொத்தழிவுகளைக் கணக்கிட்டு விடமுடியாது. கடல் அலைகளின் தாக்கத்தால் வட-கிழக்கு முழுவதிலும் 16605 உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

12494பேர் காயமடைந்துள்ளனர்.18911பேர் காணாமற் போயிருக்கிறார்கள.: 156412 குடும்பங்கள் குடியிருப்புக்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளன. இந்த விபரம் வட-கிழக்கு முழுவதிலுமாக சேகரிக்கப்பட்ட விபரமாகும். இதேவேளை மாவட்ட ரீதியாக

| மாவட்டம் | மரணம | காயம் | காணாமற் போனோர் | இடப் பெயர்வு |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 771 | 539 | 2000 | 16174 |
| வடமராட்சிகிழக்கு முல்லைத்தீவு | 1622 | 4817 | 3780 | 5800 |
| திருமலை | 947 | 2238 | 2431 | 37821 |
| மட்டு. | 2040 | 2100 | 6000 | 52617 |
| அம்பாறை | 11225 | 2800 | 5300 | 44000 |

பாதிப்புக்கள் இப்படி இருக்கிறது. ஏற்கனவே நீண்டகாலமாக நொந்து வேதனைப்பட்டுக்கொண்டி



ருக்கின்ற இந்த மக்களின் வாழ்வில் ஏற்பட்ட இந்த இயற்கையின் சீற்றம் அவர்களை மேலும் பல ஆண்டுகள் பின்தள்ளியுள்ளது. இந்த அனர்த்தத்தால் பெருமளவானவர்கள் அனாதரவாக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் இனி எதனையும் மேற்கொள்ளமுடியாத படி மோசமாக உடற்பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் இதைவிட இதில் பாதிக்கப்பட்டு உயிர் தப்பிய அனைவருமே உளரீதியாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இத்தகைய பெரும்பாதிப்புக்குள்ளாகிய இந்த மக்களுக்கு சிறிலங்கா அரசு எந்தவித மனிதாபிமான உதவிகளைக் கூட இதுவரை வழங்கவில்லை. பல்லாயிரக் கணக்கானவர்களின் உயிரைக் குடித்தும் அளவிடமுடியாத சொத்துக்களை இழந்தும் உடுத்த உடுப்புடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கின்ற இந்த மக்களின் உடனடித் தேவைகள் நிறையவே இருக்கின்றன. ஆனால் அவற்றை ஒரு சிறு அளவிலேனும் பொருட்படுத்தாது பாராமுகமாக சிங்கள அரசு இருந்து வருகிறது. வெளி நாட்டு உதவிகளைப் பெற்று சிங்களப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கிவருகிறது. வட-கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்டதமிழ் மக்களுக்கு எவ்வித உதவிகளையும் வழங்காது பாராமுகமாக திரும்பி இருக்கிறது. இந்தவேளையிலும் இனரீதியான வேற்றுமைகளைப் பார்த்துக் கொண்டு அதற்கமைவாக சிங்கள அரசு



செயற்படுகின்ற நிலை தமிழ் மக்களை இப்படியே அழித்து விட வேண்டும் என்பதையே காட்டு கிறது.

தமிழீழத்தின் கரையோரப்பகுதிகள் அம்பாறைமுதல் யாழ்ப்பாணம் வரையான நீண்ட கரையோரப்பிரதேசம் அழிவடைந்து கிடக்கிறது. இதனுள் சிக்கியவர்களை மீட்கின்ற அல்லது தப்பிய வர்களை பராமரிக்கின்ற நடவடிக்கைகள் எதையும்அரசு பொறுப்பேற்கவில்லை. தமது சொந்த ஊரை இழந்து, உறவுகளை இழந்து, பெறுமதியான சொத்துக்களை இழந்து நிர்க்கதியான நிலையில் தற்காலிக முகாம்களில் உதவிகளுக்காக காத்திருக்கிறார்கள்.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 23 நலன்புரி நிலையங்களிலும் முல்லைத்தீவில் 12 நலன்புரி நிலையங்களிலும் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.ஏற்கனவே சிறிலங்கா அரசின் இனவெறி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நிவாரணம் வேண்டி நின்ற மக்கள் தான் இப்போது கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு அவலப்பட்டு நிற்கின்ற மக்களுக்கு தம்மாலான உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களால் பாதிக்கப்பட்டமக்களுக்கு வழங்கப்பட்ட உடனடி மனிதாபிமான உதவிகளை வைத்துத்தான் இப்போது முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உடனடியான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் பாரபட்சமான இந்த நடவடிக்கை மக்களை மேலும் வெறுப்படையச் செய்துள்ளது.

---

## அள்ளித்தந்த

பின்னர் செயலணிக்குழு அமைக்கப் பட்டதிலிருந்து முழு வேலைத்திட்டங்களையும் வகுத்து ஒவ்வொரு பிரிவாக பகிர்ந்தளிக்கப்பட்டு சுலபமான முறையில் நலன்புரி நிலையத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த அவசர கால செயலணிக்குழுவின் தரவின்படி முல்லைத்தீவு பகுதியிலிருந்து பாதிக்கப்பட்டு முள்ளியவளை .பகுதியிலும், புதுக்குடியிருப்பு பகுதியிலும் வாழும் மக்களின் விபரங்கள் பின்வருமாறு, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் 562 குடும்பங்களைச் சேர்ந்த 2253 அங்கத்தவர்களும், முள்ளியவளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 159 குடும்பங்களைச் சேர்ந்த 688 அங்கத்தவர்களும் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் 179 குடும்பங்களைச் சேர்ந்த 657 அங்கத்தவர்களும் முள்ளியவளை கொக்குத் தொடுவாய் பாடசாலையில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 367 அங்கத்தவர்களும் தண்ணீரூற்று சீ.சீ. பாடசாலையில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 149 அங்கத்தவர்களும் முள்ளியவளை தமிழ்வித்தியாலயம் I இல் 100 குடும்பங்களைச்சேர்ந்த 350 அங்கத்தவர்களும் தமிழ்வித்தியாலயம் II இல் 65 குடும்பங்களைச் சேர்ந்த 216 அங்கத்தவர்களும் குமுழமுனை வித்தியாலயத்தில் 412 குடும்பங்களைச் சேர்ந்த "2462" அங்கத்தவர்களும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 201 அங்கத்தவர்களும் தங்கியுள்ளனர்.


இதுபோன்று புதுக்குடியிருப்பு பகுதியில் 9 நலன்புரிநிலையங்களில் 1103 குடும்பங்களை சேர்ந்த 4493 அங்கத்தவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த இரு பகுதி நலன்புரி நிலையங்களை முள்ளியவளை அவசரகால செயலணிக் குழுவின் நடவடிக்கை மூலம் நிவாரணப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு நலன்புரி நிலையங்களை இனங்கண்டு ஒவ்வொரு நலன்புரி நிலையத்திற்கும் ஒரு பொறுப்பாளர், கிராம சேவகர், உணவுப் பகுதி, சுகாதாரப்பகுதி, பராமரிப்புப் பகுதி, பொருள் விநியோகப்பகுதி, குடிநீர் வழங்கும் பகுதி, விபரங்களைத் திட்டமிடும் பகுதி, சிறுவர்களை விசேடமாகக் கவனிக்கும் பகுதி, பெண்களுக்கான பகுதி போன்ற அமைப்பில் ஒவ்வொரு நலன்புரி நிலையத்திலும் ஒரு காரியாலயம் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இந்த அவசரகால செயலணிக் குழு தேவையான பொருட்களை உதவி வழங்கும் உள்ளங்களிடம் இருந்தும் தொண்டர் நிறுவனங்களிடம் இருந்தும் பெற்று உரிய முறையில் வகைப்படுத்தி, ஒவ்வொரு நலன்புரி நிலையத்திற்கும் வழங்க, அதனை நலன்புரிநிலையக் குழுக்கள் உரிய முறையில்மக்களுக்கு வழங்கிவருகின்றன.

ஆக வாரித்தந்த கடல் தம் உறவுகளை வாரிக் கொண்டு போன சோகத்தில் ஆழ்ந்த நிலையில் பிறந்துள்ள புதுவருடம் பாதிக்கப்பட்ட மக்களின் சுபீட்சத்திற்கு வழி சமைக்கவேண்டுமென்பதே அனைத்து தமிழ் உறவுகளின் எதிர்பார்ப்பாகவும் அமைகின்றது.

# சமுத்திர பயங்கரவாதி நிஜமும் நிழலும்




**2004** டிசம்பர் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு ரம்மியமான காலைப்பொழுது நேரம் கதிரவன் அப்போதுதான் மெல்ல மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தான். இலங்கைத் தீவின் ஓர் கடலோரக் கிராமத்தின் ஓர் வீட்டில் சுவர்க்கடிகார நேரம் பகல் 9.15. அப்போது தென்னங் கீற்றுக்கள் சத்தமிட்டுக்கொண்டே இருந்தது. திருமணம் செய்து 19 நாட்களே ஆகியிருந்த சுரேசும் மாலாவும் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அதே நேரம் கடல் தன் இயல்பையும் மீறி வற்றத் தொடங்கியது. வேகமாக வற்றிக் கொண்டிருந்த கடல் ஆக்ரோசமான தன் அலைக் கரங்களை நீட்டியவண்ணம் சடுதியாக தன் கரையையும் கடந்து ஊர்களுக்குள் புகுந்துவிடும் என யாரும் நினைக்கவில்லை. கடற்கரை ஓரமாக நின்ற ஒருவர் ஆக்ரோசமான அதன் வருகையைக் கண்டு மிரண்டு போனார்.

3 மீற்றர் உயரமான முதலலை அவரை உள்ளிளுத்துப் போட்டது அடுத்தடுத்து வந்த பயங்கரமான அலைகள் ஊர்மேயக் கிளம்பி விட்டன. குடிசைக்குள் வெறித்தனமாகப் புகுந்த அலைகள் சுரேசையும் மாலாவையும், திசைக கொன்றாக கொடூரமாகத் தூக்கி எறிந்தது. அச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் விபரிக்கையில், வெகுதூரத்தில் கிபிர் வருவது போல் சத்தம் கேட்டது என்றும், கடல்மட்டம் குறைந்து கொண்டிருந்தது. திடீரென மிக மூர்க்கமாக ஊர்களுக்குள் வரத்தொடங்கியது எனவும் கூறினார். திடீரென 3 மீற்றர் உயரமான முதலலையைக் கண்டு அவர் மிரண் டுபோனார். அந்த அலையிலி ருந்து தப்பிக்க நினைத்த அவரை அது மூழ்கடித்தது. அதைப் பின்தொடர்ந்து வந்த இரண்டாவது பெரிய அலை அவர்களது கிராமத்தைத் தரை மட்டமாக்கி 1கிலோமீற்றர் தூரத்திற்கப்பால் இருந்து நதிக்கரை வரை அவரை அடித்துச் சென்றது. இப்போது அந்த வீட்டின் சுவர்க் கடிகாரம் எவ்வித சலனங்களு மற்று மீட்புப்பணியாளர்கள் அந்தக் கிராமத்துள் நுழைந்த நேரம் பகல் 11 என்று பனைமரத்தில் இருந்தவாறு சொல்லிக் கொண்டிருந்தது. அது பனைமர உச்சி யில் தொங்கிக்கொண்டிருந்ததால் அந்த அலைகள் 41மீற்றர் வரை உயர்ந்திருக்கலாம் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். அன்றைய தினம் ஏறக்குறைய அந்தக் கிராமத்தின் 1500 பேர் இராட்சத அலைகளுக்குப் பலியானார்கள். அந்தப் பிரதேசத்தின் பாடசாலையையும் முற்றாக அலைகள் விழுங்கியிருக்கின்றன. இனி இந்தப் பாடசாலை புனரமைக்கப்பட்டாலும் அந்தப் பாடசாலைக்குச் செல்ல பிள்ளைகள் யாரும் தப்பவில்லை என்பதுதான் கொடுமையிலும் கொடுமை. ஏறக்குறைய எல்லாப் பிள்ளை களுமே இராட்சத அலைகளுக் குப் பலியானார்கள். அந்தப் புதுமணத் தம்பதியரில் மாலா மட்டுமே வைத்திய சாலையில் நினைவு திரும்பும் போதெல்லாம் சுரேஸ் என்று முனங்கிக்கொண்டிருக்கின்றாள்.

சுனாமி என்று அழைக்கப்படும் இந்த இராட்சத அலைகள் ஏற்படுத்திப்போன இடைவெளியை முற்றாக நிரப்புவது என்பது இயலாத காரியம். இத்தகைய அழிவுகளைத் தந்துவிட்டுப் போயிருக்கும் சுனாமி என்பது என்ன? சுனாமி என்பது "துறைமுக அலை" என அர்த்தம் கொண்ட ஒரு ஜப்பானிய சொல். ஜப்பானியத் துறைமுகங்களிலும், கரையோரக் கிராமங்களிலும் ஏராளமான மரணங்களும், பேரழிவுகளும் ஏற்பட்டிருப்பதால் இந்தப் பெயர் மிகப்பொருத்தமானதே என சுனாமி என்ற ஆங்கிலப் புத்தகம் கூறுகின்றது. அசாதாரணமாக இந்த அலைகள் எப்படி இவ்வளவு உயரத்திற்கு எழும்ப முடிகின்றது? அவை எங்கிருந்து இவ்வளவு சக்தியைப் பெறுகின்றன?

சுனாமி சில சமயங்களில் கடலேற்ற அலைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. உண்மையில் சொன்னால் கடலேற்ற அலைகள் என்பவை சூரியன், சந்திரன் என்பனவற்றின் ஈர்ப்பு விசையால் கடல் மட்டத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களையே குறிக்கின்றன. சில சமயங்களில் புயற்காற்றால் ஏற்படும் பயங்கர அலைகளும் 25 மீற்றர் அதிகமாக எழும்பும். ஆனால் அந்த அலைகளைக்கூட சுனாமிகளோடு ஒப்பிடமுடியாது. பொதுவாகக் கடலேற்ற அலைகளுக்குக் கீழே ஆழமாகச் செல்ல அதன் வேகம் குறைவதைக் காணலாம். ஓர் குறிப்பிட்ட ஆழத்திற்குக் கீழே தண்ணீரில் எவ்வித சலசலப்பும் இருக்காது. ஆனால் சுனாமிகள் அப்படிப்பட்டவையல்ல. அதன் பாதிப்பு கடல் மட்டத்திலிருந்து சமுத்திரத்தின் தரைவரை செல்கின்றது. அது எத்தனை கிலோ மீற்றர் ஆழமாக இருந்தாலும் சரி சமுத்திரத்தின் தரையில் ஏற்படும் பயங்கரமான புவியியல் மாற்றங்களாலேயே சுனாமிகள் உண்டாவதனால் அவற்றின் பாதிப்பு அவ்வளவு ஆழம்வரை செல்கிறது. இதன் காரணமாகவே சுனாமிகளை நிலநடுக்க அலைகள் என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

சமுத்திரத் தரையில் ஏற்படும் புவியியல், மாற்றங்கள் காரணமாக சமுத்திரத்தரை கொஞ்சம் உயரமாக மேலே எழும்பலாம். இதனால் அங்குள்ள தண்ணீர் மேலே எழுவதால் கடல்மட்டம் அதிகரிக்கின்றது. இதன் பரப்பளவு 25,000 சதுர கிலோமீற்றர் வரை இருக்கலாம். அல்லது சமுத்திரக்கரை சற்றுக் கீழே இறங்கலாம் அதன் விளைவாக கடல் மட்டம் சற்றுக் குறையலாம். எப்படியிருப்பினும் இவ்வாறு பாதிக்கப்பட்ட தண்ணீர் புவியினுடைய ஈர்ப்பின் காரணமாக மேலும் கீழுமாகச் சென்று வருகின்றது. இதன் விளைவாக ஓர் குளத்தில் கல்லெறிந்ததும் உருவாவதைப்போன்ற வட்ட வட்டமான தொடர்ச்சியான அலைகள் உருவாகின்றன. இந்த நிகழ்ச்சி சுனாமியின் பயங்கரமான தனி அலைகளே என்ற பொய்யான கருத்தை தகர்த்தெறிகின்றன. அதற்கு மாறாக அவை தொடர்ச்சியாக விரிந்துசெல்வதால் சுனாமி தொடரலை எனப்படும். எரிமலை வெடிப்புக்கள் அல்லது கடலுக்கடியில் நிகழும் நிலச்சரிவுகள் காரணமாகவும் சுனாமிகள் ஏற்படலாம்.

இப்போது 2004 இல் 80.000 பேரைக் கொண்டுகுவித்திருக்கும் கொடூரத்தாண்டவமே. சுனாமியின் வரலாற்றில் அது ஏற்படுத்திய கொடூரமான அழிவாகும். இதற்கு முன்பு 1883 ஆகஸ்டில் இந்தோனேசியாவில் உள்ள "கிரகட்டோவா" என்ற எரிமலை வெடித்ததன் காரணமாக ஏற்பட்ட சுனாமிகளே மிகவும் பயங்கரமானதாகக் கருதப்பட்டது. அப்போது ஏற்பட்ட

**த.அகிலன்**

அலைகள் சில கடல் மட்டத்திலிருந்து 41 மீற்றர் உயரம் வரை சென்று சுமார் 300 நகரங்களையும், கிராமங்களையும் அழித்துப் போட்டது. அதன் காரணமாக 40,000 இற்கு அதிகமானோர் இறந்ததாகவும் பதிவுகள் கூறுகின்றன.

கொடிய சுனாமி அலைகள் கடலில், தரையில் என்று இரண்டு முகங்களைக் கொண்டுள்ளன. சூறைக்காற்றினால் ஏற்படும் அலைகளோ மணிக்கு 100km/h இலும் குறைந்த வேகத்தில்தான் செல்லும். மறுபக்கத்தில் சுனாமி அலைகளோ சமுத்திரத்தின் ஆழத்தில் கூட மணிக்கு800km/h வேகத்தில் செல்லக்கூடியது என சுனாமி என்ற புத்தகம் கூறுகின்றது. இவ்வளவு வேகத்தில் சென்றாலும் ஆழ்கடலில் எந்த ஆபத்தும் ஏற்படாதது ஏன்?

ஆழ்கடலில் ஒரு அலையின் உயரம் 3 மீற்றருக்கு குறைவாக இருப்பதே முதற்காரணமாகும். இரண்டு அலைகளின் முகடுகளிற்கும் இடையே நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தூரம் இருப்பதால் அலையின் சரிவு மிகவும் குறைவாக இருப்பதே இரண்டாவது காரணமுமாகும். ஆகவே கப்பலில் இருப்பவர்கள் அறியாமலேயே ஒரு சுனாமி அதற்கு அடியில் கடந்து செல்லமுடியும். அதாவது கப்பலின் தளத்தில் உள்ள மேசையின் மீதுள்ள தேனீர்க்கோப்பையில் இருந்து ஒரு சொட்டுத் தேனீர்கூடச் சிந்தாமல் சுனாமி அலைகள் கப்பலைக்கடக்கும் எனினும் கடலில் பாதுகாப்பைப் பெறவேண்டுமாயின் 180மீற்றர் ஆழமுள்ள இடத்திற்குக் கப்பலை இட்டுச் செல்ல வேண்டும்.

நிலத்தைநெருங்குகையில் சுனாமி அலையின் இயல்பு முற்றிலும் மாறிப்போகிறது. இங்கு அது தரையோடு மோதுவதால் அதன் வேகம் குறைவடைகின்றது. ஆனாலும் ஒரே சீராகக்குறைவதில்லை. அலையின் முன்பக்கத்தைவிட பின்பக்கம் ஆழமான தண்ணீரில் இருப்பதால் அது சற்று வேகமாகவே



இந்தோனேசிய கரையோரம் சுனாமிக்கு முன்னும் பின்னும்

பயணம் செய்கின்றது. இந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத முன்பக்க அலை அமுக்கத்தினால் உயர எழும்புகின்றது. இதற்குள் ஒன்றின் பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கும் தொடர் அலைகள் எல்லாம் அலையின் முன்பக்கத்திற்கு வந்துசேர்ந்து அதற்கு சக்தி ஊட்டுகின்றன. கடைசியாக சுனாமிகள் கரையை எட்டுகையில் நுரை கிளம்பும் அலைபோல அல்லது தண்ணீரால் ஆன ஒரு சுவர் போல கரையில் விழுகின்றது. ஆனால் அவை பொதுவாக அதிகளவு தண்ணீர் மட்டத்திற்கு மேலே எழும்பி வெள்ளம் போலவே தரையில் வந்துசேர்கின்றன. இவ்வாறு கடல்மட்டத்திற்கு மேலே 500 மீற்றர் வரை தண்ணீர் எழும்புவது அவதானிக் கப்பட்டிருக்கிறது. அவ்வெள்ளம் செல்லும் போது அவ்வழியில் உள்ளவற்றையெல்லாம் துடைத்தழித்துக் கொண்டே போகும்.

ஒரு சுனாமி வருகிறது என்றால் கடலேற்றம் ஏற்பட்டு திடீரென்று கடல்மட்டம் அதிகரிக்கின்றது. ஆனால் எப்போதுமே அதுதான் முதல் அறிகுறி என நினைத்து ஏமாந்துவிடக்கூடாது. சில சமயங்களில் நேர் எதிர் மாறாகவும் நிகழலாம். எப்போதும் இல்லாத அளவிற்கு கடல் இறக்கம் ஏற்பட்டு கடற்கரைகள் துறைமுகங்கள். விரிகுடாக்கள் போன்றவை வற்றிப்போகலாம். இதில் எது முதலில் நிகழ்கின்றது என்பது தொடரலையின் எந்தப் பகுதி முதலில் கரையை எட்டுகின்றது என்பதைப் பொறுத்தே அலை அகடு (தாழி) ஏற்படின் கடல் இறக்கமும் அலை முகடு (முடி) ஏற்படின் கடலேற்றமும் நிகழும். தண்ணீர் மட்டம் குறைவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது எல்லா அலைகளிலும் காணப்படும் தண்ணீரின் வட்ட அல்லது நீள்வட்ட அலைவும் இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். கடலில் நீந்துபவர்கள் அலை வருவதற்கு முன் தண்ணீர் தங்களைக் கடலுக்குள் இழுப்பதனை உணரலாம். அதே போலவே சுனாமிகள் வருகையின போது இந்த இழுப்பு சற்று அதிகமாக இருக்கும். அதனால் தான் சுனாமியின் முதலலை வருவதற்கு முன்பு கடற்கரைகளில், துறைமுகங்களில் தண்ணீர் வற்றிப்போகிறது.பதிவுகளின்படி 1990 தொடக்கம் 2000 ஆண்டு வரை 10 சுனாமிகள் 4000 இற்கும் அதிகமானோரைக் கொன்று குவித்திருக்கிறது அது தவிர புவி முழுவதும் 83 சுனாமிகள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. 90 களின் முன் 10 ஆண்டுகளுக்கு 57 சுனாமிகள் என்ற சராசரியை விட இது மிக அதிகமானதாகும். ஆனால் தகவல் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றமே இந்த அதிகரிப்பிற்குக் காரணமென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது. அத்தோடு கரையோரத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் இறந்தவர்களின் எண்ணிக்கையும் அதி

(11ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமியின் தாக்கத்தால் உறவுகளை இழந்து தவிப்போரின் துயர்துடைக்க வாரி வழங்குவோம்

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை அறைகூவல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியின் தாக்கத்தினால் குடும்ப உறவுகளையும், உடமைகளையும், இழந்து தவிக்கின்ற இலட்சக்கணக்கான எம் உறவுகளின் நிலைமையையும், தேவையையும் உணர்ந்து எம் வீட்டு உறவுக்கு ஏற்பட்ட இன்னலைத் துடைக்க உதவுவது போன்று எம்மாலியன்ற அதிகூடிய நிதியை வாரிவழங்கி காலம் எம்மீது சுமத்திய வரலாற்றுக் கடமையினை நிறைவு செய்ய நாம் அனைவரும் திடசங்கற்பம் கொள்வோம்.

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் வணபிதா. பிரான்சிஸ் யோசப் அடிகளார் கல்விச் சமூகத்தவர் அனைவருக்கும் மேற்கண்ட வேண்டுகையினை பேரவையின் சார்பாக விடுத்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வரலாற்றுக்காலத்துக்கு முன் எமது அறிவுச் செல்வங்களான ஏராளமான சங்கத்தமிழ் இலக்கிய ஏடுகளை கடல் கொள்ளை கொண்டதையும், தெற்கே பரந்திருந்த பழந்தமிழ் நிலப்பரப்பைக் கடல்கோள் கவர்ந்துவிட்டதையும் கடைச்சங்க இலக்கியங்களூடாகப்படித்தருக்கின்றோம். ஆயினும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுக்காலத்தில் அது போன்ற கடல்கோள்களை, கடற்பெருக்குகளை நாம் எப்போதும் எதிர்கொள்ளவில்லை.

எனினும் தற்போது வரலாற்றுக் காலத்தில் நடந்திராத, கேள்விப்பட்டிராத இயற்கைப் பேரழிவை சுனாமி கடல் பெருக்கு தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்படுத்தியிருக்கிறது. தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மனித உயிர்களைக் கொள்ளைகொண்ட இப்பேரழிவில் எமது தாயகத்தில் மட்டும் ஒரேநாளில் 20,000 இற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். அதைவிட பல மடங்கு மக்கள் பேரலைகளால் அள்ளிச் செல்லப்பட்டு மரங்கள், வேலிகள், வீடுகள் போன்றவற்றில் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகி இன்னலுறுகின்றனர். பல லட்சம் மக்கள் வீடுவாசல், உடமைகள், உறவுகள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக முகாம்களிலும், மருத்துவமனைகளிலும், தெரிந்தவர்கள் நலன்விரும்பிகளின் இல்லங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மண்ணிலும், கட்டடஇடிபாடுகளுக்குள்ளும் புதையுண்டவர்களது உடல்களையும், கடல்நீரால் அடித்துச்செல்லப்பட்டவர்களது உடல்களையும், தேடும் பணி தொடர்கிறது. குழந்தைச் செல்வங்களை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த குழந்தைகளும் தவிக்கும் தவிப்பு சொல்லில் வடிக்கமுடியாது. அவர்கள் பழைய நிலைகளுக்குத் திரும்ப நீண்டகாலம் எடுக்கலாம்.

சுனாமியின் தாக்கத்தினால் குடும்பஉறவுகளையும், உடைமைகளையும் இழந்து தவிக்கின்ற இலட்சக்கணக்கான எம் உறவுகளைப் பராமரிக்க அவர்களுக்கான உணவு, உடை, உறையுள், மருத்துவம் போன்ற தேவைகளை நிறைவுசெய்வதில் சிங்கள அரசு பாராமுகமாக இருந்துவரும் நிலையில் எமது உறவுகளின் இன்னல் களைந்து துயர்துடைக்கும் பாரிய பொறுப்பை எம்மவர்களே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது

எமது முன்னோர்களான பல நூறு தலைமுறையினருக்கு ஒரு போதும் ஏற்படாத இன்னலை சுனாமியின் வடிவத்தில் இயற்கையின் சீற்றம் எம்மை எதிர்கொள்ள வைத்திருக்கின்றது. எனவே எம் முனனோருக்கு ஏற்படாத பெருந்துயர் துடைக்கும் இப்பணி வரலாற்றுக் கட்டாயமாக எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. சுனாமியின் தாக்குதலால் வாடிவதங்கியிருக்கும் எமது உறவுகளை மலரவைக்க, அவர்கள் துயர்துடைத்து நிமிர வைக்கப்பெரும் நிதி தேவைப்படுகிறது.

இழந்த இறைமையை மீட்டு உரிமைகளையும், பெருமைகளையும், எம் இனத்திற்குப் பெற்றுக் கொடுக்கும் பெரும் பொறுப்பைச் சுமந்து விடுதலைக்கு வழிகாட்டி வரும் எமது தேசியத்தலைவர் தனது நிதியத்திலிருந்து பெரும் நிதியை வழங்கி அமைப்பின் பல்வேறு பிரிவினரையும், முழுமையாக இத்துயர்துடைக்கும் பணியில் நிறுத்தி துயர்துடைக்கும் பணி தொய்வின்றித் தொடர வழிவகுத்திருக்கின்றார்.

எனவே நிலைமையையும், தேவையையும் உணர்ந்து எமது வீட்டுக்கு, உறவுக்கு ஏற்பட்ட இன்னல்களைத் துடைக்க உதவுவது போன்று எம்மால் இயன்ற ஆகக்கூடிய நிதியை வாரி வழங்கி காலம எம்மீது சுமத்திய வரலாற்றுக் கடமையை நிறைவுசெய்வோம்.

உலக வரலாற்றுப் போக்கையும் எமது வரலாற்றுக்கடமையையும், நன்கு உணர்ந்துகொள்ளக்கூடிய கல்விச் சமூகத்தவர் அனைவரும் இந்த மாத ஊதியத்தை முழுமையாகவேனும், ஒரு பகுதியையேனும் வழங்கி உதவவேண்டும். பள்ளிகள் மீண்டும் திறந்து தவணை தொடங்கிய பின் மாணவர்கள், பெற்றோர்கள் உதவிகளையும் திரட்டி வழங்கவேண்டுமென தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை அனைவரையும் வேண்டிநிற்கிறது.

(சோ)

# இந்திய-பாக். உறவில் முன்னேற்றம் நம்பிக்கை தெரிவிக்கிறார் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

இந்திய-பாக், உறவில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என பாக், அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறுகையில், பாக் அதிபர் பதவியுடன் இராணுவத்தலைவர் பதவியையும் தொடர்ந்து வகிப்பது என முடிவு செய்துள்ளேன். தற்போது பாக். இந்தியா இடையே அமைதிப் பேச்சு நடக்கிறது இராணுவ தலைவராக நான் மீண்டும் பொறுப்பேற்றதற்கு இந்தப் பேச்சுவார்த்தை மிக முக்கிய காரணம் இந்திய-பாக் உறவில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இறையாண்மை அடிப்படையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சு வார்த்தையில் கொள்கைகளை விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை. இந்தப் பேச்சு வார்த்தையில் காஷ்மீர் பிரச்சினை முக்கிய பங்கு வகிக்கும். காஷ்மீர் பிரச்சினைக்கு கருத்துக் கணிப்பின் மூலம் தீர்வு காண வேண்டும் என்ற எங்களது கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. மேலும் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் சில தருணங்களில் காஷமீர் மக்களையும் இணைத்துக் கொள்ளலாம். காஷ்மீர் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் விருப்பப்படியே காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். காஷ்மீர் உட்பட பல்வேறு பிரச்சினைகளில் பாக், தன்னிச்சையாக வளைந்து கொடுக்காது. இந்தியாவும் வளைந்து கொடுத்தால், நாங்களும் வளைந்து கொடுக்கத் தயார் இவ்வாறு முஷாரப் கூறினார்.

# பீகாரில் பொலிசார் மீது தீவிரவாதிகள் தாக்குதல் ஆயுதங்களையும் பறித்துச் சென்றனர்

(பீகார்)

ஹாஜிப்பூர்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ரயில்வே பொலிசாரை தாக்கி தீவிரவாதிகள் அவர்களிடமிருந்த நான்கு துப்பாக்கிகள் மற்றும் 80 தோட்டாக்களையும் பறித்துச் சென்றனர்.

இது குறித்து ரயில்வே பொலிசார் கூறியதாவது:-

பீகாரில் ஹாஜிப்பூர்- மான்சாய் பயணிகள் ரயில் நேற்று முன்தினம் இரவு பட்டாவ்ரி என்ற இடத்திற்கு வந்தது. அப்போது தீவிரவாதிகள் 50 பேர் ரயிலில் ஏறி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது இரும்புக் கம்பிகளால் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். மேலும் அவர்களிடமிருந்த நா கு துப்பாக்கிகள், 80 துப்பா கி குண்டுகள் மற்றும் பொலிஸ் உடைகளையும் தீவிரவாதிகள் பறித் ுச் சென்றனர். இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த பொலிஸ் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். சம்பவத்திற்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகளே காரணமாக இருக்காலமென நம்பப்படுகிறது,

# சுனாமி சேத நிவாரண நிதியாக தமிழ்நாட்டிற்கு 250 கோடி இந்திய ரூபாய் மன்மோகன்சிங் அறிவிப்பு

(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன்சிங், தமிழ் நாடு, புதுவை, கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் 2நாட்கள் சுற்றுப்பயணம் செய்து 'சுனாமி' சேதப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

இந்த சுற்றுப்பயணம் முடிந்ததும் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவுடன் மன்மோகன்சிங் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் "சுனாமி" சேதப் பகுதிகளில் நிவாரண நிதிக்காக ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்தார்.

மேலும் நிவாரணப்பணிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் உடனடியாக வழங்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார். தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கை தொடர்பான கோரிக்கைகளை உடனுக்குடன் கவனிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருப்பதாகவும பிரதமர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக திரட்டப்பட்டு வரும் தமிழக பொது நிவாரண நிதிக்கு நன்கொடைகள் வந்த வண்ணமுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டுக்கோட்டை ஹீண்டாய் மோட்டார்' நிறுவன நிர்வாக இயக்குனர் பி.எச்.சங் ரூ.2 கோடியும், சென்னை மணப்பாக்கம் எல் அண்டு டி நிறுவன துணை நிர்வாக இயக்குனர் ஏ.ராமகிஸ்ணன் ரூ.1கோடியும் வழங்கவுள்ளார்.

சென்னை அப்பலோ வைத்தியசாலை டாக்டர் பிரதாப் சி.ரெட்டி ரூ.1 கோடியும், 'கோகாகோலா இந்தியா' நிறுவன தலைமை நிர்வாகி சஞ்சீவ் குப்தா ரூ.50 இலட்சமும் வழங்கவுள்ளனர்.

இந்த நிவாரண உதவித் தொகைக்கான காசோலைகள் நாளை (திங்கட்கிழமை) சென்னை கோட்டையில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவிடம் வழங்கவுள்ளனர்.

# அந்தமானில் ஐம்பது கல்லூரி மாணவர்களின் நிலை என்னவெனத் தெரியவில்லை

அந்தமான் ஜவகர்லால் நேரு ராஷ்டிரீய மகாவித்தியாலயா கல்லூரியைச் சேர்ந்த 'பி.ஏ.' இறுதி ஆண்டு மாணவர்களுக்கு கடந்த மாதம் 25ஆம்திகதியுடன் தேர்வு முடிந்துவிட்டது. மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) மாணவர்கள் அனைவரும் சேர்ந்து புத்தாண்டை கொண்டாடிய பின் சொந்த ஊர் திரும்பலாம் என்று அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர். ஆனால், மறுநாள் (ஞாயிற்றுக் கிழமை) காலை நிக்கோபாரில அவர்கள் தங்கி இருந்த விடுதியை 'சுனாமி' அலைகள் கபளீகரம் செய்துவிட்டன. அங்கு இருந்த 50 மாணவர்களின் கதி என்னவென்று இது வரை தெரியவில்லை. கல்லூரி பேராசிரியர் ஜோதிர்மிஸ்ராய் சவுத்ரி துயரம தோய்ந்த இந்தத் தகவலை நிருபர்களிடம் வெளியிட்டார்.

## சமுத்திர...

கரிக்கிறது என்றும் அது கூறுகிறது.

இலங்கைத்தீவின் கரையோரப் பகுதிகளிலும் ஏறக்குறைய 20 இலட்சம் பேர் வாழ்கின்றனர் என்பதும் கவனிக்கப்படவேண்டியது. சுனாமிகள் பசுபிக் பெருங்கடலில் தான் அதிகளவு ஏற்படுகின்றன. ஏனென்றால் அதன் அடித்தளத்தில் தான் கடற்புவிநடுக்கம் அடிக்கடி ஏற்படுகிறது. ஒவ்வொரு வருடமும் பசுபிக்கின் ஏதாவது ஒரு மூலையில் பேரழிவை ஏற்படுத்தும் ஒரு சுனாமியாவது ஏற்படும் என்று ஒரு புத்தகம் கூறுகிறது. அமெரிக்கக் கண்டத்தில் கடந்த 50 வருடங்களில் நிலநடுக்கத்தால் இறந்தவர்களில் 62% பேர் சுனாமிக்கு பலியானவர்களென்று அறிக்கைகள் கூறுகின்றன.

முன்னைய காலங்களில் சுனாமி குறித்து கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளில் சுமார் 75% வீதமானவை பொய்யானவை. எனவே மக்கள் எச்சரிக்கையை அசட்டை செய்ய அதிக வாய்ப்பிருக்கிறது. ஆனால் இப்போது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுனாமிகளை இலகுவில் அறிந்துவிட முடியும்.

அடியமுக்க பதிகருவி (BOTTOM PRESSURE RECORDER) B.P.R என்பதே இந்த மேம்பட்ட முறையில் உபயோகிக்கப்படும் முக்கிய கருவியாகும் அதன் பெயரைச் சுட்டிக்காட்டுகிறபடி இது ஆயிரக்கணக்கான மீற்றர் கீழே சமுத்திரத்தின் தரையில் வைக்கப்படுகிறது. இந்தக்கருவி மிகவும் சக்தி வாய்ந்தது.

1 cm உயரமுள்ள சுனாமி அதன் மீது கடந்து சென்றாலும் தண்ணீரில் ஏற்படும் அமுக்கத்தை அது பதிவுசெய்து விடுகிறது. பிறகு இந்த BPR ஒலியலைகளைப் பயன்படுத்தி ஓர் விசேசித்த மிதவைக்குத் தகவல்களை அனுப்புகிறது. மிதவை இதனை மையத்திற்குக் கடத்துகிறது. இந்த முறை மிகவும் துல்லியமானது என்பதால் எச்சரிக்கைகளின் வழுமிகவும் குறையும் என நம்புகின்றனர்.

எனினும்முழுமையான பாதுகாப்பைப்பெற பொதுமக்களின் விழிப்புணர்வும் கல்வியுமே அதி முக்கியமானவை. சுனாமி தாக்கக் கூடிய கரையோரப் பிரதேசத்தில் நீங்கள் வாழ்ந்து வந்தால் முன்னெச்சரிக்கைகளினாலோ அல்லது பூமியதிர்ச்சி ஏற்படுவதை நீங்கள் உணர்ந் தாலோ அல்லது என்றும் இல்லாதவாறு கடலிறக்கம் ஏற்பட்டலோ உடனே மேடான பகுதிக்கு ஓடி விடுங்கள். சுனாமிகள் கடலில் ஜெட் வேகத்தில் பயணிக்கின்றன. கரையோரத்தில் கூட அதே வேகத்தில்தான் பயணிக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள். அலை வருவதைப் பார்த்தபின் தப்பி ஓடலாம் என்பது நடாக்காத காரியம்.

# அழிந்துபோயுள்ள கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்ப பாரிய நிதியுதவி தேவை!

## ம.உ. செயலக இயக்குநர் வணபிதா கருணாரெட்ணம்



(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உண்மையிலேயே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முழு வேலைத் திட்டத்தையும் பொறுப்பேற்று எல்லோரையும் ஒன்றிணைத்து சிறப்பாக செயற்படுத்திக் கொண்டு வருகின்றது.

கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாயகத்து மக்களும், புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் தாராளமாக உதவி செய்கின்றார்கள். பெருமளவு பொருட்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை நாம் நன்றியோடு பாராட்டுகின்றோம் என வடகிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குநர் வணபிதா மரியாம்பிள்ளை கருணாரெட்ணம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தொடர்ந்து இந்த மக்கள் மீளக் குடியேற முடியாத அளவிற்கு அழிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் புதிதாக கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக பாரியளவு நிதியுதவி இன்று தமிழர் தாயகத்திற்கு தேவைப்படுகின்றது. இதற்கு தாராளமாக பங்களிப்புக்களை விரைவாக தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்குள்ள மத அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் எல்லோருமே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்துதான் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக முழுவளமான உதவிகளைச் செய்து அனுப்புமாறு புலம்பெயர்ந்து வாழும் உறவுகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நீண்ட காலத்திற்கும் இந்த மக்கள் மீளக்குடியேற முடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் தங்கியிருப்பதற்கான இடங்கள் போதியளவில் இல்லை. போதிய அடிப்படை வசதிகள் இல்லாத பாடசாலைகளில் தான் மக்கள் இருக்கின்றார்கள். உண்மையிலே அவை மனித சுகாதாரத்திற்கோ உகந்ததல்ல.

ஆகவே, உதவி செய்ய விரும்புகின்ற நிறுவனங்களுக்கு மீளக்குடியமர்ந்து வாழ்வதற்கு அமைக்கக் கூடிய கூடாரங்களை விரைவாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்க முன்வர வேண்டும். அத்துடன் குடிநீர் பெரிதும் பிரச்சினையாகவே உள்ளது. ஆகவே, தாராளமாக பௌசர்களை (தண்ணீர் தாங்கிகளை) இப்பிரதேசங்களுக்கு அனுப்பி குடிநீர் வழங்குவதற்கு தயவு செய்து உதவ வேண்டும் என்று விரும்புகின்றோம்.

எமது மக்களின் நிலைப்பாடுகளை சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவப் படுத்தி வெளிக்கொணர வேண்டும். ஏனென்றால், ஒரு சில பிரதேசங்களில் செய்திகள் மட்டும் பிரச்சாரப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். வடக்கு-கிழக்கில் குறிப்பாக, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் அழிவடைந்தவேளை அச்செய்திகளை வெளிக்கொணர ஊடகங்கள் முன்வரவில்லை என்பதுதான் வேதனையான விடயம். எனவே, அனைத்து ஊடகங்களும் எந்தவிதமான பரபட்சமும் இல்லாமல் எமது பிரதேச அழிவுகளை வெளிக்கொணர வேண்டும் என்றும் உருக்கமாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் மனித உரிமைகள் செயலக இயக்குநர் தெரிவித்துள்ளார். (சோ)

# கிளிநொச்சி-முல்லை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் உறவுகளுடன் தொடர்புகொள்ள

## இலவச சர்வதேச தொலைத்தொடர்பு சேவை

(அலுவலக செய்தியாளர்)

கடற்புவி நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது உள்ளூர், வெளிநாட்டு உறவுகளுக்கு தமது நிலையை இலவசமாகத் தொலைபேசி மூலம் தெரிவிப்பதற்கு ஏற்ற வகையில் சர்வதேச தொலைத் தொடர்பு சேவையினால் விசேட தொலைத்தொடர்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தொலைத்தொடர்பு சேவையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி முல்லை.மாவட்டத்தில் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய இரண்டு இடங்களிலும் செய்மதித் தொலைபேசி மூலம் தமது உறவுகளுடன் (வெளிநாட்டு, உள்நாட்டு) இலவசமாக உரையாடுவதற்கு ஏற்ற ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு கடந்த மூன்றுநாட்களாக இணைப்புச் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதேபோல கிளிநொச்சி மாவட்டத்திலும் பளை சர்வதேச தொலைத் தொடர்பு சேவையிலும், புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு அலுவலகத்திலும் விசேடமாக செய்மதித் தொலைபேசி இணைப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி மற்றும் ஏனைய பகுதிகளில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்கள் தமது உறவுகளுடன் உரையாடி தமது நிலையைத் தெரிவிப்பதற்கு ஏற்றவகையில் கிளிநொச்சி சர்வதேச தொலைத்தொடர்பு சேவை நிலையம் உட்பட அனைத்து சர்வதேச தொலைத்தொடர்பு நிலையங்களிலும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை நிலையங்கள் ஊடாக தமது நிலையை உள்ளூர் வெளியூர் மக்களுக்கு 24 மணி நேரமும் இலவ சமாக மேற்கொள்ளலாம் எனவும் சர்வதேச தொலைத்தொடர்பு நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (லோ,தீ)

2004 சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரராக உக்ரைனைச் சேர்ந்த அன்டிரி ஷெவ்கென்கோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்காக இவருக்கு தங்கப் பந்து விருது வழங்கப்பட்டது. விருதுடன் உக்ரைனில் உள்ள கீவ் நகருக்கு வந்த அன்டிரிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



# 2005 இலும் எங்களது வெற்றிகள் தொடரும்

## இங்கிலாந்து அணித் தலைவர் வோன்



2005 ஆம் ஆண்டிலும் எங்களது வெற்றிகள் தொடரும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் மைக்கேல் வோன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கிங்ஸ்மீட்டில் வியாழக்கிழமை நடைபெற்ற 2-ஆ வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாகவே நிறுத்தப்பட்டதால், தென்னாபிரிக்க அணி தோல்வியிலிருந்து தப்பியது.

378 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, வெளிச்சமின்மையால் நடுவர்கள் ஆட்டத்தை நிறுத்தினர். மேலும் 15 ஓவர்கள் வீசப்பட வேண்டியிருந்த அந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி ஏறக்குறைய எழுதப்பட்ட ஒன்றாகவே இருந்தது.

" தென்னாபிரிக்க அணியை மீண்டும் வீழ்த்த வேண்டும் என்பதற்காக அணியினர் மேற்கொண்ட மிகப் பெரிய முயற்சி அது. அதற்காக எனது வீரர்களைப் பாராட்டுகிறேன். இயற்கைக்கு (மேகக் கூட்டம்) எதிராக நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது: என்றாலும் இந்தத் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது பெருமிதம் அளிக்கிறது என்றார் வோன்.

" அடுத்து கேப்டவுனில் நடைபெறும் போட்டியிலும் 2- ஆவது டெஸ்ட் போட்டியின் கடைசி 3 தினங்களில் ஆடிய ஆட்டங்களைப் போல வெளிப்படுத்தி முன்னேற்றம் காண்போம்.

" 2004 இல் பெற்ற வெற்றிகளை,2005 புத்தாண்டிலும் தொடர வேண்டும் என்பதே அணியின் ஒட்டுமொத்த இலக்கு" என்றார்.

# உள்ளூர் போட்டிகளில் விளையாட வேண்டாம்

## சச்சின் டெண்டுல்கருக்கு அறிவுரை



இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரரான சச்சின் டெண்டுல்கரை உள்நாட்டுப் போட்டிகளில் விளையாட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இடது முழங்கையில் ஏற்பட்ட அவரது காயத்தினைத் தொடர்ந்து அவருக்கு போதிய அளவு ஓய்வு தேவைப்படுவதால், மேற்படி அறிவுரை வழங்கப்பட்டதாக இந்திய அணியின் பிசியோதெரபிஸ்ட்டான ஆன்ட்ரு லெய்ப்ஸ் தெரிவித்தார்.

டெண்டுல்கருக்கு சில மாதங்களுக்கு முன்பு ' டென்னிஸ் எல்போ' எனப்படும் முழங்கை காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்கு இடது கையை மடக்க முடியவில்லை. மேலும்" டெண்டுல்கருக்கு முழங்கை இன்னும் சிறிது விறைப்பாகவே உள்ளது. முற்றிலும் அவரது காயம் குணமடையவில்லை. எனவே அவர் உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தவிர கொல்கத்தாவில் அடுத்தவாரம், பி.சி.சி.யின் தற்காலிக தலைவராக இருக்கும் ஜக்மோகன் டால்மியாவைச் சந்தித்து தனது எதிர்காலம் குறித்து பேசவிருப்பதாகவும் அவர் கூறினார்.

லெய்ப்ஸ் அவுஸ்திரேலியாவில் மேற்படிப்புப் படிக்க விரும்புகிறார். எனவே அவர் இந்திய அணியில் தொடர்ந்து நீடிப்பது கேள்விக் குறியே.




# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கங்குலி நிதி திரட்டுகின்றார்




கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு பல்வேறு இடத்தில் இருந்தும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி நிவாரண நிதி திரட்டுகின்றார். அவர் கொல்கத்தா மற்றும் புறநகர் பகுதிகளில் நிதி திரட்டுகிறார்.

முன்னணி டென்னிஸ் வீராங்கனைகளில் ஒருவரான மரிய ஷரபோவா (ரஷ்யா) தாய்லாந்தில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதியாக 5 இலட்ச ரூபாய் வழங்கினார். அவர் இதற்கான காசோலையை தாய்லாந்து துணை பிரதமரிடம் வழங்கினார்.


# நிதிதிரட்ட உலக லெவன் அவுஸ்.இடையிலான போட்டி



சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டும். விதமாக உலக லெவன் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நல நிதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் இது குறித்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என அச் சம்மேளனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி டிம்மே தெரிவித்துள்ளார். இந்த ஆட்டம் சனவரி 11அல்லது 12ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீரர்களிடம் கிடைக்கும் வரவேற்பை பொறுத்து, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் அப்போட்டிக்கு அனுமதி கோரப்படும் என்றார் அவர். இங்கிலாந்து, தென்னாபிரிக்கா அணிகளைத் தவிர இலங்கை உள்ளிட்ட மற்றைய நாடுகள் அப்போட்டியில் பங்கேற்க முடியும் எனவும் மே தெரிவித்துள்ளார். இதற்கிடையே சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டுவதற்காக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒரு நாள் தொடரை நடத்துவது குறித்து பாகிஸ்தான் வாரியமும் ஆலோசனை செய்து வருகின்றது.



## சிந்தனைக்கு

அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பது தான் எளிமை; தன்னலம் தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கி விடுகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-01-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## சிறுமைத் தனம்!

"நாடு கடந்த 26ஆம் திகதி வரை எதிர்நோக்கியிருந்த யுத்த அபாயத்தை விட தற்பொழுது அதன் வேகம் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 26ஆம் திகதி நிகழ்ந்த பேரலை அனர்த்தத்தினால் விடுதலைப்புலிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் அவர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தத்தினால் எந்தளவிற்கு உள்ளூர அகமகிழ்ந்து கொண்டுள்ளார் என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

கடந்த 26ஆம் திகதி அந்தமான் கடற்பரப்பில் நிகழ்ந்த கடலடி பூகம்பத்தின் விளைவாக உருவாகிய சுனாமி பேரலைகளினால் தமிழர் தாயகத்தில் பெரும் மனித அவலம் ஏற்பட்டது என்பது உண்மையே. பல்லாயிரம் பேரின் இறப்பிற்கும், பல்லாயிரம் கோடி ரூபா இழப்பிற்கும் இது காரணமாகியதோடு, பெரும் எண்ணிக்கையானோரின் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

இவ் அனர்த்தத்தில் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டுள்ள சிங்களப் படைத் தரப்பும் பெரும் அனர்த்தங்களைச் சந்தித்தன என்பதும் உண்மையே. சிறிலங்கா பாதுகாப்புப் படைத் தரப்பின் தகவலின்படி வடக்கில் மட்டும் எட்டு இராணுவ முகாம்களும், மூன்று கடற்படை முகாம்களும் முற்றாக அழிவிற்குள்ளாகியுள்ளன. அதே போன்று கிழக்கிலும் கணிசமான இழப்புக்கள் ஆயுதப் படைத் தரப்பிற்கு ஏற்பட்டது என்பதும் அறிவிக்கப்பட்டதொன்று.

இதேவேளை, இப்பகுதியில் அதாவது சுனாமி பேரலைகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பின் எண்ணிக்கை – அங்கு இருந்த ஆயுத தளபாடங்கள் என்பன விடுதலைப்புலிகளினால் அறிய முடியாததொன்றல்ல. அத்தோடு, இவற்றிற்கு சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள சேதமும் மதிப்பிட முடியாததும் அல்ல. ஆனால், விடுதலைப்புலிகள் இது தொடர்பான எந்தத் தகவலையும் வெளியிட வில்லை. ஏன் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து அவர்கள் பேசவே இல்லை. தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்துள்ள இப்பேரழிவு குறித்த அறிக்கையில், "தமிழ் பேசும் தாயக மண்ணிலும், தென்னிலங்கை கடலோரப் பகுதியிலும் தமது உற்றார், உறவினர்களைப் பலி கொடுத்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய - சிங்களச் சகோதரர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக" எனப் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தனது அனுதாபத்தையே வெளிப்படுத்தியிருந்தார்.

இதேவேளை, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களோ, "தற்பொழுது நாம் பெரியதொரு மனிதாபிமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்தில் முரண்பாடுகள், இடைவெளிகள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கதைத்துக் கொண்டிராமல் அவலத்திற்குத் தீர்வு காண்பதற்கு எல்லோரும் சேர்ந்துழைப்பது பற்றிப் பேசுவதே சிறந்தது" எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களோ, "நாங்கள் அரச படைகளின் இழப்பைப் பற்றிக் கூறிக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில், போரில் அழிவென்பது குறிப்பிடத்தக்கதொன்று. ஆனால் இந்த இயற்கை அனர்த்தத்தில் அழிவடைவதைப் பெரிதுபடுத்த நாங்கள் விரும்பவில்லை. இது மனித நேயமற்ற செயல்" எனக் கூறி தமது மனித நேயத்தையும், உயர்ந்த பண்பையும் வெளிக்காட்டியிருந்தார்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இயற்கை அனர்த்தத்தினால் விடுதலைப்புலிகள் பலமிழந்து போய்விட்டார்கள் என்ற வகையில் பேசியிருப்பது அவரது இனவெறித்தனமான சிந்தனையையும், அவரது சிறுமைத்தனமான மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளமுடியும். ஆனால், சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது பரிவாரங்களோ அன்றி சிங்கள ஆயுதப் படைத் தரப்போ எதிர்பார்ப்பது போன்று, நம்புவது போன்று கடற்புலிகள் இவ் அனர்த்தத்தில் பெரியளவிலான சேதத்தை சந்திக்கவில்லை. ஆனால், இதனை வலியுறுத்தி நம்பவைக்க வேண்டிய தேவை புலிகளுக்கும் இல்லை. நமக்கும் இல்லை.

ஏனெனில், இன்று விடுதலைப்புலிகளுக்கு உள்ள பெரும் கவலை இவ் அனர்த்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் அவலம் குறித்ததே. இவ் அவலத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு எந்த வகையில் நிவாரணம் தேடுவது என்பதே. அவர்களின் துயரை எவ்வாறு துடைப்பது என்பதே.

சிறிலங்கா அரசு, தமிழர் தாயகப் பிரதேசத்தையும் தனது ஆள்புலப்பரப்பாகக் கூறிக்கொண்டாலும் இங்கு பெரும் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு பெரிதாக எதையும் செய்துவிடவில்லை. இனியும் செய்யும் எனவும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகையினால், இம்மக்களின் துயரை எவ்வாறு நீக்குவதென்பதே விடுதலைப் புலிகளினது ஒரே சிந்தனையாகும்.

இதன் வெளிப்பாடாகவே, தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களும், தமிழ் மக்களுக்கு சர்வதேச சமூகமும், புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் எமது மக்களும் உதவ வேண்டும் எனப் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார். அதாவது, சனாதிபதி சந்திரிகாவின் சிறுமைத்தனமான சிந்தனை தமிழர் தரப்பில் இல்லை. அவர்கள் அழிவின்போதும் உயர்ந்த சிந்தனையுடனேயே உள்ளனர். இதனை தமிழரின் பலவீனம் எனக் கருதின் இதற்காக வருத்தந்தெரிவிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# பிரான்சின் மையப் பகுதியில் துயர் துடைப்போம் நிகழ்வு

கடற்புவி நடுக்கத்தால் உயிர் நீத்த தமிழீழ தாயக உறவுகளுக்காக நேற்று முன்தினம் மாலை 4.00 மணி அளவில் பிரான்சின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் பாஸ்தில் நகரில், துயர் பகிர்வோம் துயர் துடைப்போம் எனும் நிகழ்வு நடைபெற்றது.

பிரான்சில் போர் நினைவுச் சின்னமாக உள்ள அணையாத தீபம் எரியும் சதுக்கத்தின் முன்பு இது நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கைகளில் தீபங்கள் ஏந்திய படி பெரும் துயரத்தோடு நின்று கொண்டிருந்தனர். மக்களின் கைகளில் இயற்கை அனர்த்தம் நிகழ்த்திய கோரக் காட்சிகள் தாங்கிய அட்டைகள் இருந்தன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. இவர்களுக்குத் துணையாக தமிழ் பெண்கள் அமைப்பினரும், தமிழ் இளைஞர் அமைப்பினரும், தமிழ் - பிராங்கோ மாணவர் அமைப்பினரும், பிரஞ்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரும், ஏனைய தமிழ் கழகங்களும் துணையாகச் செயற்பட்டனர். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சதுக்கத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது. தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த கவிஞர் வீராவும், காந்தரூபன் அறிவுச் சோலையின் துணைப்பொறுப்பாளர் விசாலகன் அவர்களும் கலந்து இந்நிகழ்வில் பங்கேற்றனர். பிரான்சின் பல்வேறு ஊடகங்களும் இந் நிகழ்வை ஒளி. ஒலி பதிவு செய்தன.பிரான்சில் இயங்கும் பிரதான தொலைக்காட்சியினர் தே.எப் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. ஆழிப் பேரலையால் நம் உறவுகளுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்த விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் பிரஞ்சு மொழியிலும் விநியோகம் செய்யப்பட்டன.

# மீட்பு மற்றும் சுத்திகரிப்பு வேலைகளை புலிகள் நன்கு திட்டமிட்டு செய்கின்றனர்!

### பி.பி.சி செய்தியாளர் பாராட்டு

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவ்விடயங்களைச் சுத்திகரிப்புச் செய்வது என்பனவற்றைப் புலிகள் நன்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கின்றார்கள் என முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் மீட்புப் பணியினை நேரில் அவதானித்த பி.பி.சியின் செய்தியாளர் ஒருவர் வியப்புத் தெரிவிக்கின்றார்.

மேலும் முல்லைத்தீவில் தனியார்களும் நலன் விரும்பிகளுமே நிவாரண உதவிகளை கொண்டு வருவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் தான் அங்கு நின்ற சமயம், தனியார்களின் நிவாரணங்களை சுமந்த ஒரேயொரு லொறியே அங்கு வந்ததாகக் குறிப்பிட்டார். தற்போது கிணறுகளிற்கு குளோரின் பிரயோகிக்கும் செயற்பாட்டிலும், அப்பிரதேசங்களிற்கு பக்றீறியா எதிர்ப்பு மருந்துக்களைப் பிரயோகிப்பதிலும் புலிகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவில் மரணமானவர்களில் 90 விழுக்காட்டினர் கத்தோலிக்கர் எனத் தெரிவித்துள்ள மேற்படி செய்தியாளார், மேற்படி சடலங்களின் நிலைமை காரணமாக அவை கத்தோலிக்க முறைப்படி புதைக்கப்பட முடியாமல் எரிக்கப் படுவதாகவும், இதுபற்றி தான் அங்குள்ள வணக்கத்துக்குரிய பிதாவிடம் வினவிய போது அவர், இவ்வாறானதொரு பாரிய துன்ப நேரத்தில் அவர்கள் எவ்வாறு அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்பதை ஆண்டவன் கருத்தில் கொள்ளமாட்டான் என்றும். தற்போது தப்பியிருப் போரின் சுகாதாரமே முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

# அடையாளம் காண்பதற்கு உதவுமாறு கோரிக்கை!

கடற்பெருக்கத்தின் காரணமாக இறந்தோர் மற்றும் காணாமல் போனோரை அடையாளம் காண்பதற்காக பொதுமக்களின் உதவியை காவல்துறையினர் கோரியுள்ளனர்.

இதன்படி காணாமல் போனோர் மற்றும் இறந்தோரின் அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள் ஏனைய ஆவணங்களை எவராவது கண்டெடுத்தால் அவற்றை உடனடியாக அருகில் உள்ள காவல்துறை மையத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர் இவ்வாறான ஆவணங்களை காவல்துறையினரிடம் ஒப்படைப்பதன் மூலம் இறந்தோர் மற்றும் காணாமல் போனோரை அடையாளம் கண்டுகொள்ள முடியும் எனக் காவல்துறையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

### முல்லைத் தீவுப்பகுதியில்

# பாதிக்கப்பட்ட மக்களை உடன் பதியக்கோரிக்கை

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து கிராம மக்களும் தங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ம.ரங்கன் கேட்டுக்கொண்டார்.

கலைமகள் வித்தியாலயத்தில் வண்ணாங்குள கிராமமும், வித்தியானந்தக் கல்லூரியில் கள்ளப்பாடு, கள்ளப்பாடு தெற்கு கிராமமும், ஆர்சி.முள்ளியவளை கிழக்கு பாடசாலையில் தீர்த்தகரை, சிலாவத்தை கிராம மக்களும், வற்றாப்பளை ம.வி. சிலாவத்தை தெற்கு கிராமத்தைச் சேர்ந்த மக்களும் கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையில்,மணற் குடியிருப்பு,முல்லைதெற்கு கிராம மக்களும், தண்ணீரூற்ற சிசி. பாடசாலையில் முல்லை பட்டினம், கோயில் குடியிருப்பு கிராம மக்களும், குமுழமுனை ம.வி.யில் அளம்பில் செம்மலை, செம்மலை கிழக்கு,நாயாறு கிராம மக்களும். முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் செல்வபுர கிராம மக்களும், ஏனைய வட்டுவாகல் கிராம மக்கள், அந்தந்த நலன்புரி நிலையத்திலும்,முள்ளி வாய்க்கால் கிராமமக்கள் புதுக்குடியிருப்பு ம.வி.யிலும் தங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறும்.

எதிர்வரும் 05.01.2005 வரை எவரும் செல்ல வேண்டாம் எனவும் நலன் புரிநிலையங்களில் இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.(20)

# முல்லை நகரிலுள்ள மருத்துவமனை நாளை முதல் வழமை போல் இயங்கும்

கடல் அனர்த்தம் நடைபெற்ற 26.12.2004 அன்று உடன் மருத்துவ சேவைக்காக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் உள்ள இரு வைத்திய அதிகாரிகள், தாதிகள் முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திராவுடன் சிகிச்சைகளை மேற்கொண்டதாக முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் முல்லை நகரில் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலையில் நாளை தொடக்கம் வழமையான சகல சிகிச்சைகளும் நடைபெறும் எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி தர் மேந்திரா தெரிவித்தார். அனைத்து பணியாளர்களையும் வேலைக்கு திரும்புமாறு கேட்டுக் கொண்டார். (20)

# இலங்கைத் தீவுக்கு உலகவங்கி 100 மில்.டொலர் வழங்க முடிவு

கடற்புவி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உலக வங்கியினால் ஒதுக்கப்பட்டுள்ள 250 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 100 மில்லியன் டொலர்களை இலங்கைத் தீவிற்கு வழங்க முடிவெடுத்திருப்பதாக உலக வங்கி நேற்று அறிவித்துள்ளது. இலங்கையில் பெருமளவிலான மக்கள் கடற்கரையோரங்களிலேயே வாழ்ந்து பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்ததனாலேயே தேவையின் நிமித்தம் கருதி இவ் நிவாரண நிதி பகிர்ந்தளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பாதிப்புக்கு முன்னர், ஏற்கனவே வேறு பல திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியும் இந்த 100 மில்லியன் டொலர்களில் ஒரு பகுதியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையுடன் இந்தோனேசியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளும் நிதியுதவியினை எதிர்பார்ப்பதனால் முன்னர் ஒதுக்கப்பட்ட நிதியினையும் இவ் அவசர காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டள்ளது.

# மட்டக்களப்பு உணவுக் களஞ்சியத்திலிருந்து நிவாரணப் பொருட்களை எடுக்க பிக்கு முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள அரசாங்க உணவுக் களஞ்சியத்திலிருந்து பலாத்காரமாக நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு பௌத்த பிக்கு ஒருவர் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப் பட்டுள்ளது.

நேற்று மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி சில நபர்களை அழைத்துக்கொண்டு கல்வியங்காட்டிலுள்ள உணவுக் களஞ்சியத்திற்குச் சென்று நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு முயற்சித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம், பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு அறிவித்ததையடுத்து தற்போது அந்த இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

இதேவேளை கிழக்கு மாகாணத்தில்தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக வெளிமாவட்டங்களிலிருந்து குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு வந்திருந்த வாகனங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. நிவாரணப் பணிகள் பாதிப்படைந்தன.

106 வருடங்களின் பின்பு டிசம்பர் மாதத்தின் மழை வீழ்ச்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுடன் முடிவடைந்த டிசம்பர் மாதத்தில் அதிகரித்திருந்ததாக வளி மண்டல வியல் திணைக்கள மாவட்ட பொறுப்பாளர் கே.சூரியகுமார் தெரிவித்தார்.

1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1300.38 மி.மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டதை சுட்டிக் காட்டிய அவர் கடந்த டிசம்பர் மாதம் 926.02 மி.மீற்றர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த வியாழன் இரவு முதல் நேற்று இரவு 9.00 மணி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 328.01 மி.மீற்றர் மழை பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2594.07 மி.மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு...

கோட்டைக்கல்லாறில் இருந்து குருக்கள் மடம் வரை தனிப்பகுதியாகவும், அதிலிருந்து பனிச்சங்கேணிப்பாலம் வரை மற்றுமொரு பகுதியாகவும் உள்ளன. வீதி அரிக்கப்பட்டு தனித்தனித்தீவு களாக்கப்பட்டதனால் அவ்வழியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப் பட்டுள்ளதுடன் நிவாரணப் பணிகள் பாதிப்படைந்துள்ளன.

## மூதூருக்கு...

பான்மையின உத்தியோகத்தர்கள் மேற்படி கதவுகளைத் திறந்து விட்டது இந் நிவாரணப் பொருட்கள் செல்லவிடாது தடுப்பதற்காகவே என மூதூர் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர். திடீரென நீர் திறந்து விட்டதனால் முல்லையடியில் தமிழ் மக்களின் வீடுகளிற்குள் நீர் புகுந்ததால் 38 குடும்பங்கள் புதுக் குடியிருப்பில் வைத்துத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

## பாதிக்கப்...

குழு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி வருவதோடு நிவாரணப் பணிகள் குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபயரட்னவை சந்தித்து மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆராய்ந்தார். இதே வேளை கல்முனை வீதியில் உதயபுரம் சந்தியில் சேதமடைந்துள்ள வீதியை திருத்தும் பணியில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் ஈடுபட்டுள்ளார்கள் தளபதிகள், பிரபா, ரமணன் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் இந்தப் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

## அமெரிக்க...

இதைவிட ரி-130ரக இராட்சத விமானம் ஒன்றின் மூலம் மேலும் பல உதவிப் பொருட்களும் இலங்கைக்கு வரவிருப்பதாகவும் கூறினார்.

தேவையேற்படின் அமெரிக்கத் துருப்பினரின் எண்ணிக்கையும் அதிகரிப்பு ஏற்படலாம் எனக் கூறிய அவர், இலங்கையில் நடுத்தர மீற்றும் நீண்ட காலப் புனர் நிர்மாண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசு உதவி வழங்க தயாராகவும் உள்ளது எனவும் கூறினார்.

இதற்கிடையில், விடுதலைப்புலிகளின் அமைப்பு அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட அமைப்பு. இந்நிலையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் சுனாமியின் தாக்கத்தினால் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளது. சர்வதேச சமூதாயத்தின் உதவிகளைப் புலிகள் கோரியிருக்கும் நிலையில், அமெரிக்கா நிவாரணப் பொருட்களை அங்கும் கொண்டு செல்லுமா? அமெரிக்கத் துருப்புக்கள் அங்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுமா? எனக் கேட்டதற்கு, பாதிக்கப்பட்ட சகல இலங்கையர்களுக்கும் அமெரிக்க நிவாரணப் பொருட்கள் சென்றடைவதை தாம் உறுதி செய்யவுள்ளதாகவும், இது இனப்பிரச்சினை சம்பந்தமான விடயம் அல்ல என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உதவி செய்ய அமெரிக்கா தயார் என்றும் அவர் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

## மட்டு...

யாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளன. ஏனெனில் முக்கியமாக குடிநீர் பிரச்சினை உண்டு. கடற்கரைப் பிரதேசமாக இருப்பதால் இந்த இடங்கள் சுனாமி அனர்த்தத்தின் பின் குடிநீர் உப்புத் தண்ணீராக மாறிவிட்டது. தற்போது பெய்துவரும் மழையால் வெள்ளப்பெருக்கெடுத்துப் பாய்வதால் சுகாதாரச் சீர்கேடான நிலைமை உள்ளது.

எனவே, தற்போதைய நிலையில், இந்த மக்களை சுமார் நான்கு கிலோ மீற்றர் தள்ளி தற்காலிகமாக குடியமர்த்த வேண்டிய நிலைமை உள்ளது. இதுவரையில் இந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான திட்டமெதுவும் அரச தரப்பால் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் பத்து இடங்களில் தலா ஆயிரம் குடும்பங்களை குடியமர்த்தி அவர்களை குறிப்பிட்ட காலம் வரை பராமரிக்கும் ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மட்டு. அம்பாறை மாவட்ட மக்களை நிரந்தரமாக குடியமர்த்தும் ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றதென நம்புகிறேன். புவியியல் ரீதியாக பார்க்கும்போது சில குடியிருப்பு இடங்களை மாற்றி வெவ்வேறு இடங்களில் குடியமர்த்துவது பற்றியும் ஆலோசிக்க வேண்டியுள்ளது என்றார்.

மட்டு. அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரை ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் வாவியுமாக மிகவும் ஒடுங்கிய தரையமைப்புக் காணப்படுகிறது. எனவே இந்த இடத்தில் மீள் குடியமர்வு என்பது குறித்து நாம் யோசித்தே முடிவெடுக்க வேண்டியுள்ளது.

இதற்கான திட்டங்களை எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

அண்மையில் சுனாமியினால் ஏற்பட்டது பாரிய அனர்த்தம். மட்டு. மாவட்டத்தில் ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் குடும்பங்கள் உள்ளன. இதில் கிட்டத்தட்ட அறுபத்தேழாயிரம் குடும்பங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கடற்கரையோரப் பிரதேசத்தில் கூடியளவு வீடுகள் சேதப்பட்டும் இடிந்தும் காணப்படுகின்றது. இதனைப் புனரமைப்பதென்பது பாரிய வேலைத்திட்டம். இந்த வேலைத் திட்டத்தினை மனித வலுவை மட்டும் வைத்துக் கொண்டு செய்ய முடியாது. நவீன உபகரணங்கள் டோசர், எக்ஸ்வேற்றர், லோடர் போன்ற கனரக வாகனங்களைப் பயன்படுத்தியே இப்பிரதேசங்களை புனரமைப்புச் செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார்.

சிலர் இங்குள்ள புனரமைப்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட முழுமையான சுதந்திரம் இல்லையென தகவல் வெளியிட்டு வருகின்றனர். இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்? எனக் கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில்,

இது ஒரு தவறான தகவல். இது ஒரு இயற்கை அனர்த்தம். இந்த வகையில் எவரும் கட்டுப்பாட்டை விதித்திருப்பதாகத் தெரியவில்லை. படைத் தரப்பும் ஏமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. நாமும் படைத் தரப்புக்கு இந்த நிவாரணப் பணிகளில் ஒத்துழைப்பு வழங்கி கொண்டு இருக்கின்றோம்.

இருந்தும் சில இடங்களில் சில பிரச்சினைகள் உண்டு. குறிப்பாக, மக்கள் இந்த அனர்த்தம் நிகழ்ந்த இடங்களுக்கு உணவுப் பொருட்களை கொண்டு வருவதில் படைத் தரப்பால் சில இடையூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த உணவு வண்டிகள் மட்டு. மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளால் கொண்டு வந்து மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரவேண்டிய சூழ்நிலை உண்டு. இவ்வாறு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு வரும் உணவு வண்டிகளை மறித்து தாமதப்படுத்தி சோதனையிடுவதாக தகவல் கிடைத்துள்ளது. இந்த இடர்பாடுகள் தொடர்பாக மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் இராணுவ அதிகாரிகள், அரச அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்றார்.

*கிளி. மாவட்ட மலேரியாதடை இயக்க*

# தெளிகருவி இயக்குநர்களை வருகை தரக்கோரிக்கை

கிளி.மாவட்ட மலேரியாத்தடை இயக்கத்தின் பளைப்பகுதியில் பணிபுரிபவர்கள் தவிர்ந்த ஏனைய தெளிகருவி இயக்குநர்கள் அனைவரும் இரண்டு நாட்கள் தங்கிநின்று வேலை செய்யக்கூடியவாறு தங்கள் தெளிகருவிகளுடன் நாளை திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு கிளிநொச்சி மலேரியாதடை இயக்கப்பணிமனைக்கு வருகை தருமாறு கிளி.மாவட்டட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி வேண்டி இருக்கிறார்.

*–திருமலைக்கு எடுத்துவரப்படும் பொருட்களை–*

# பாதிப்பற்ற பகுதிக்கு மாற்றும் அரச அதிகாரிகள் படையினர்

திருகோணமலை மாவட்டத்துக்கு எடுத்துவரப்படும் நிவாரணப் பொருட்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு அரச அதிகாரிகளும் படையினரும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு இடங்களில் இருந்து எடுத்து வரப்படும் இந் நிவாரணப் பொருட்கள் அரச அதிகாரிகளின் நடவடிக்கைகளால் அவர்களுக்கு உரிய வேளையில் கிடைக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இப்பொருட்கள் பாதிப்புக்கள் ஏற்படாத பகுதிகளைச் சோந்த மக்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

மாவட்ட செயலகத்தின் கடமை நேரம் முடிந்து தமிழ்தெரிந்த அலுவலகர்கள் யாவரும் வெளியேறிய பின்னரே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (32)

## முல்லை...

நடவடிக்கை எதிர்வரும் 05ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப் படவேண்டும்.

அடுத்தது இனிமேல் குடியமர்த்தும் மக்களை கடற்கரையில் இருந்து 300 மீற்றர் தொலைவிற்கு அப்பால் இருத்தவேண்டும். இவ்வாற குடியமர்த்தப்படுபவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று கொடுக்க உதவிகளை மேற்கொண்டு அதற்குரிய உபகரணங்களைப் பெற்று கொடுக்க வேண்டும்.

அப்போது தான் முல்லைத்தீவு நகர்ப்பகுதியை மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தனக்கு நேரடியாக தெரிந்த ஒருவர் வெளிநாட்டிலிருந்து உதவி புரியமுன்வந்துள்ளதாகவும் அவர் கரையோர மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க 100 படகுகளையும் அதற்குரிய எஞ்சின்களையும், 100 வலைகளையும் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இந்த மீட்புப் பணி நடவடிக்கையும், இடிபாடுகளையும் நீர் நிலைகளை யும் சீர் செய்யும் நடவடிக்கையும் மிகவும் துரிதகதியில் முடிக்கப் பெற்றவுடன் அடுத்த கட்ட நகர்வுகள் விரைவில் மேற்கொள்ளப்படும் இதற்கு அப்பகுதி அரச திணைக்களங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் மாவட்ட சமாசம் மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த அவசர சந்திப்பில் முல்லைத்தீவு பகுதி பிரதேச செயலர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், நிகொட் திட்ட பணிப்பாளர், கிராமசேவகர்கள், முல்லைத்தீவு மாவட்ட சமாசத்தலைவர், பொதுமக்கள் அப்பகுதி கிறிஸ்தவ பாதிரிமார் ஆகியோர் கலந்துகொண்டனர் (கு,ச,20)

## சுனாமியால்...

யோகத்தையும் துண்டித்ததுடன் முகாமில் பணியாற்றிய அரசசார்பற்ற நிறுவனத்தைச்–சார்ந்த இரத்தினசிங்கம் மோகனதாஸ் என்பவரையும் கருணாநிதி சுபாஸ்கரன் என்ற நலன்புரி முகாமில் தங்கியிருந்த இளைஞரையும் கடுமையாகத் தாக்கினர். மேலும் அவரைக் காக்க முயன்ற பெண்கள் சிறுவர்கள் மீதும் தாக்குதலை நடத்தினர். இதனால் மக்கள் பீதியடைந்து நலன்புரி முகாமை விட்டு ஓடி 500 மீற்றர் தூரத்திலுள்ள அன்னை வேளாங்கன்னி கோயிலில் தங்கியுள்ளனர். மக்கள் அனைவரும் இக் கோயிலில் வெளிச்சம் எதுவும் அற்ற நிலையில் அச்சத்துடன் இருந்தவேளை வடமராட்சி அரசியல்துறைப்பொறுப்பாளர் தாயா, பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் மேற்படி கோவிலுக்கு உடன் விரைந்து சென்று மக்களின் பீதியைப் போக்க உடன் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் மக்களின் மனங்களின் மனதில் கொடிய இழப்புக்களின் மத்தியில் துன்பங்களைச் சுமந்துள்ள வேளையில் இவ்வாறான சிக்கல்கள் பாதிக்கப்பட்ட மக்களின் மனதில் மிகுந்த சீற்றத்தையளித்துள்ளது. இந்நிலை தொடராது இருக்க சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றன.

இதுகுறித்து யாழ்.மாவட்ட அரசியல்துறையினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினரிடமும் தெரியப்படுத்தியுள்ளனர்.

## முல்லை...

தமிழீழவிடுதலைப்புலிகளின் மீட்புப்பணியினரால் உடனடியாக அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இக்குளத்தில் மேலும் அதிகளவான சடலங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் காரணத்தால் குளத்தில் இருந்த நீரைவெளி ஏற்றும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. குளத்துக்குள் 4 அடி ஆழத்தில் மணலைத் தோண்டி இரண்டு சடலங்கள் எடுக்கப்பட்டிருப்பதாக மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் கடற்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மோகன் தெரிவித்தார்.

இந்தநிலையில் இப்பகுதியில் மேலும் பல சடலங்கள் இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. எனவே இன்று அந்தப்பகுதியில் மீட்பு நடவடிக்கை முழுமைப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீட்புப் பணிப் போராளிகளால் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. மீட்பு நடவடிக்கை தொடர்கிறது. (லோ,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.